## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.11.2017 | அனைத்து புனிதர்கள் பெருவிழா - திருப்பலி | 02 |
| 02.11.2017 | இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவுநாள்-திருப்பலி | 03 |
| 05.11.2017 | ஆண்டின் பொதுக்காலம் 31ம் ஞாயிறு - திருப்பலி | 04 |
| 09.11.2017 | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு - திருப்பலி | 06 |
| 12.11.2017 | ஆண்டின் பொதுக்காலம் 32ம் ஞாயிறு - திருப்பலி | 07 |
| 13.11.2017 | தூய அலோசியஸ் வெர்சிலியா, கலிஸ்துஸ் கரவாரியோ-திருப்பலி | 08 |
| 15.11.2017 | அருளாளர் மதலேனா மொரானோ - திருப்பலி | 10 |
| 18.11.2017 | தூய பேதுரு, பவுல் ஆலயம் நேர்ந்தளிப்பு - திருப்பலி | 11 |
| 19.11.2017 | ஆண்டின் பொதுக்காலம் 33ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 21.11.2017 | தூய கன்னிமரியா காணிக்கையாக அர்ப்பணித்தல்-திருப்பலி | 14 |
| 22.11.2017 | தூய செசிலியா - திருப்பலி | 15 |
| 26.11.2017 | கிறிஸ்து அரசர் பெருவிழா - திருப்பலி | 16 |
| 30.11.2017 | தூய அந்திரேயா - திருப்பலி | 18 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. கல்லறை திருநாள் 19
2. தூய அலோசியஸ் வெர்சீலியா, கலிஸ்துஸ் கரவாரியோ - வாழ்வு தரும் பாடம் 22
3. யார் இந்த அரசர்? கிறிஸ்து அரசர் பெருவிழா - ஒரு பார்வை 25
4. திருச்சபை செய்திகள் 27

# பகுதி -1 வழிபாட்டு வழிகாட்டி

## 01.11.2017 அனைத்து புனிதர்கள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

**I.** திவெ. 7:2-4,9-14 **II.** 1யோவா 3:1-3 மத் 5: 1-12அ

ஆன்மா தெய்வீகமானது, ஜடப்பொருட்களின் கட்டுக்குள் அது அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இக்கட்டுகள் அவிழும்போது ஆன்மா நிறை நிலையை அடையும். அந்த நிலையே முக்தி. முக்தி என்பது "விடுதலை" என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. "தூயவர்களும், மாசற்றவர்களும் கடவுளைக் காண்கின்றனர். அப்போது இதயக் கோணல்கள் நேராகின்றன" (சுவாமி விவேகானந்தர்). "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (இறைமகன் இயேசு). மறு உலகில் நாம் இறைவனுடன் இணைந்து வாழ, நாம் செய்த நன்மைகள், இறைத்தொண்டு, நம் தூய வாழ்வு, எளிய வாழ்வு மற்றும் தியாக வாழ்வு இவற்றால் நாம் முக்தி பேறு பெற்று புனிதர்களாக இறை இயேசுவால் அடையாளப் படுத்தப்படுகின்றோம். இன்றைய நாளை நமது தாய் திருச்சபை அனைத்துப் புனிதர்களையும் நினைவு கூறும் நாளாக கொண்டாடுகின்றது. ஒவ்வொரு புனிதர்க்கும் ஒரு சிறப்பான புதுமையான வரம் இருப்பதால் நாம் நம் தேவைகளை அவர்கள் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளவும், நமக்காக அவர்கள் இயேசுவிடம் பரிந்துப் பேசவும், அவர்களை நாம் நம்முடைய ஆன்ம வழிகாட்டிகளாகப் பயன்படுத்திக்கொண்டு இத்திருப்பலி வழியாக பக்தியுடன் நம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து புனிதர்களின் துணையுடன் இறையருளைப் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவராக உள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்மிடையே வாழும் புனிதராக நம்மை வழிநடத்த நாம் புனித வாழ்வு வாழும் மக்களாக மாறவும், கத்தோலிக்க திருச்சபை புத்துயிர் பெற்றெழுந்து ஒளிவீச அனைத்து குருக்களும் தங்களை முழுமையாக அர்ப்பணித்து இறை ஊழியம் செய்யவும் புனிதர்கள் அவர்களுக்கு இறையாசீரைப் பெற்றுத்தரவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் துறவறத்தார் திருச்சபையின் திருவழிப்பாடுகளுக்கும் துணை செய்வது மட்டுமே தங்களின் பணியென்றில்லாமல் ஏழை, எளிய மக்களுக்கு உதவவும், இயேசுவை அனைவர்க்கும் அறிவிக்கவும், இறைவார்த்தையை பகிர்ந்தளிக்கவும், இறை மதிப்பீடுகளின்படி தொண்டு புரியவும் அனைத்து புனிதர்களின் துணையோடு அவர்கள் இறைமக்களாக வாழவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நாளைய தலைவர்களாக, நம்மை வழிநடத்தப் போகும் இளைஞர்கள் உலகளாவிய வாழ்விற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் பொறுப்புள்ள, கண்ணியமான, பக்தி, விசுவாசமுள்ள வாழ்வு வாழ மனித நேயத்துடன் நீதி நேர்மையை நிலைநாட்ட அனைத்து புனிதர்களின் பாதுகாப்பும், வழிகாட்டுதலும் கிடைக்கப்பெற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. பொதுநிலையினராக திருச்சபையால் அடையாளப்படுத்தப்பட்டாலும் இறைச் சமூகத்திற்குத் தேவையானவற்றை தியாக உள்ளத்துடன் வழங்கி திருக்குடும்பங்களாக வாழும் பலர், இறைவார்த்தையை வாழ்வாக்கி இன்று புனிதர்களாக விளங்குகின்றனர். நாமும் அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி புனித வாழ்விற்குள் பயணம் செய்ய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 02.11.2017 இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் சுரேஷ்

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் நம் திருச்சபையோடு இணைந்து இறந்த விசுவாசிகள் அனைவரின் திருவிழாவைக் கொண்டாடக் கூடியுள்ளோம். தங்களது மூதாதையரை அவர்களது நினைவு நாளில் நினைவு கூர்ந்து அவர்கள் வழியாக ஆசிர்பெறும் வழக்கம் பொதுவாக அனைத்து மதத்தினரிடையே பரவலாக உள்ளது. ஆனால் கத்தோலிக்கத் திருச்சபையானது இன்னும் ஒருபடி மேலாக இறந்த விசுவாசிகள் அனைருக்கும் பொதுவாக ஒரு மாதத்தையே சிறப்பாகத் தந்துள்ளது. இந்த திருவிழாவை பொதுவாக நவம்பர் 2ம் தேதி கொண்டாடக் காரணம், ஏறக்குறைய 962ம் ஆண்டு பிரான்சு நாட்டில் குளுனியில் பிறந்த துறவி புனித ஒடில்லோ தனது துறவற மடத்தில் நவம்பர் 2ம்தேதி இறந்தவர்கள் அனைவருக்காகவும் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிக்கும் முறையை உருவாக்கினார். இந்த செபமுறை எல்லா இடங்களுக்கும் பரவியது.

14ம் நூற்றாண்டு முதல் கத்தோலிக்க திருச்சபை முழுவதும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. ஒருநாளில் முடிந்துபோகும் ஒன்றாக இல்லாமல் நவம்பர் மாதம் முழுவதும் இறந்தவர்களுக்காக மன்றாடுகிற மாதமாக தற்போது மாறியிருக்கிறது. எனவே இந்நாளில் நம் தாய்த் திருச்சபையில் உழைத்து மரித்தவர்கள் நமது குடும்பங்களில் மரித்தவர்கள் அனைவருக்காகவும் இத்திருப்பலியில் அவர்களின் ஆன்மாக்கள் விண்ணகமடைய மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பான பிதாவே, எம் தாய் திருச்சபையில் உழைத்து மரித்த திருத்தந்தையர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர் ஆகியோரை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் விண்ணக வாழ்வில் உம்மோடு ஒன்றித்து, உமது புனிதர்களின்

கூட்டத்தில் ஒன்றுசேரும் முடிவில்லா வாழ்வை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் இறைவா, "எங்களது இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும், பல்வேறு வகைகளில் நாட்டை மேம்படுத்தவும் தங்களின் இன்னுயிரை ஈந்த அனைத்து ஆன்மாக்களும் உமது பாதம் வந்து சேர, முடிவில்லா ஒளியை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் பிதாவே, எங்களுக்கு அருட்சாதனங்கள் வழங்கி எங்களை ஞானவழியிலும், ஆன்மீகத்திலும் சிறப்பாக வழிநடத்தி மரித்த குருக்களுக்காகவும், கன்னியர்களுக்காகவும் செபிக்கின்றோம். இவர்கள் உமது இறையாட்சியில் பங்குபெற முடிவில்லா வாழ்வை அளித்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. "கிறிஸ்துவுக்குள் மரித்தோர் மீண்டும் உயிர்ப்பெற்றெழுவர்" என்ற வார்த்தைக்கேற்ப எம் குடும்பங்களில் மரித்த எல்லா ஆன்மாக்களுக்காகவும் செபிக்கின்றோம். அந்த ஆன்மாக்கள் உத்தரிக்கின்ற இடத்திலிருந்து விடுபட்டு விண்ணகத்தில் இடம் பெறவும், மேலும் யாரும் நினையாத ஆன்மாக்கள் இறைவன் பாதமடையவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 05.11.2017 ஆண்டின் பொதுக்காலம் 31ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I மலாக்.1:14ஆ-2:1-2,8-10 **II.** 1தெச 9:7ஆ-9,13 மத் 23:1-12

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நாம் பொதுக்காலம் 31ம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றோம். இம்மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்தபோது யாதொன்றையும் கொண்டுவரவில்லை, இறக்கும்போதும் எதையும் கொண்டு போவதுமில்லை. காண்கின்ற யாவும் முன்பிருந்தே இங்குள்ளவை. நாம் இன்று பயன்படுத்துவது நாளை வேறு ஒருவர் பயன்படுத்துவார். நேரத்தையும் உழைப்பையும் தவிர வேறு எதனையும் நம்மால் தர இயலாது. நமது உழைப்பின் பயனான பணமோ, பொருளோ வேறெதுவோ, அதில் முதலானதையும், சிறந்ததையும் நம்மைப் படைத்த கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். பழுதானதை, தரமற்றதை, உதவாததை, கடவுளுக்குச் செலுத்துவது முறையற்றது. தங்களுக்குத் தேவையற்றதை, குறையுள்ளதை, ஏன் செல்லாத பணத்தைக் கோவில் உண்டியலில் போடுவது இவை யாவும் கடவுளுக்கு ஏற்புடையனவன்று.

தூய பவுல் மற்றும் சீடர்கள் இறையரசின் நற்செய்தியைப் பறைச்சாற்ற தங்களுடைய நேரம், பணம், உழைப்பு என அனைத்தையும் இறைவன் பொருட்டு மக்களுக்காகச் செலவிட்டனர். தங்களுக்குத் தேவையான பொருளைத் தாங்களே உழைத்துப் பெற்றனர். பரிசேயர்களும்,

மறைநூல் அறிஞர்களும் தங்களுக்குப் பெயர், புகழ் வேண்டுமென்றே நற்காரியங்களையும் விலையுயர்ந்த ஆடைகளையும் உடுத்தி சபைகளிலும், உணவுபரிமாறும் இடத்திலும் முதலிடம் பிடித்தனர். இதனை இயேசு கண்டிக்கிறார். உங்களில் பெரியவனாய் இருக்கிறவர் ஊழியக்காரனாய் இருக்கட்டும் என்றும், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றும் கூறினார். இதையே இன்றைய இருவாசகங்களும் நற்செய்தியும் நமக்குத் தெரிவிக்கின்றன. எனவே, நன்றி கலந்த தாழ்ந்த உள்ளத்தோடு முதலானதையும் சிறந்ததையும் இறைவனுக்கு அர்ப்பணித்து இறையருள் பெற விழைந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபைக்காகவும் திருத்தந்தைக்காகவும் மன்றாடுவோம். அன்பான இறைவா, எமது திருச்சபையைப் பொறுப்புடன் வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம் திருக்கரங்களினால் ஆசிர்வதித்து இறைப்பணியை தொய்வின்றி, பாரபட்சமின்றி செயல்படுத்த ஆண்டவரின் பிரதிநிதிகள் என்ற உண்மையை உணர்ந்து விசுவாசத்திலிருந்து விலகாமல் மக்களை வழிநடத்திடும் மாண்பினை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பங்கு மக்களுக்காக மன்றாடுவோம். இரக்கமுள்ள இறைவா, திருமுழுக்கினால் உம்மோடு இணைக்கப்பட்டுள்ள எமது பங்கு மக்கள் யாவரும் எந்நாளும் விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று பங்கோடும், பங்குதந்தையோடும் இணைந்து செயலாற்றி இறையருளைப் பெற்றிடவும், பொருளாதாரத்தில் வளர்ச்சியும், குடும்பத்தில் ஏற்றமும் கண்டு வறுமை நீங்கி வளமுடன் வாழ வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இளையோருக்காக மன்றாடுவோம். கனிவுள்ள இறைவா, இருபால் இளையோரும் கிறிஸ்துவை பிரதிபலிக்கும் கண்ணாடிகளாய் விளங்கி தங்கள் திறமைகளை ஆக்கப்பூர்வமாய்ப் பயன்படுத்தி நாட்டுக்கும் வீட்டுக்கும் குடும்பத்திற்கும் பெருமைச் சேர்த்து நேரிய வழியில் பயணித்திட வேண்டிய வரங்களை நல்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அரசியல் தலைவர்களுக்காக மன்றாடுவோம். தயையுள்ள இறைவா, எமது மாநிலத்தை ஆளும் அரசியல் தலைவர்கள், தங்கள் பதவி, வாழ்க்கை, குடும்பம் என்ற குறுகிய வட்டம் தாண்டி, பொருளாதாரத்தில் நலிந்தோரையும் மேம்படுத்தும் எண்ணம் கொண்டு சுயநலம் விடுத்து நல்லுள்ளத்தோடு செயலாற்றும் நல்மனதை நீர்தாமே அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 09.11.2017 இலாத்தரன் பேராலய அர்ச்சிப்பு விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I எசே. 47:1-2,8-9,12 II 1கொரி 3:9ஆ-1,16-17 யோவா 2:13-22

தொடக்க கால திருச்சபையில் ஆலயங்களின் நேர்ந்தளிப்பு நாளை விழாவாகக் கொண்டாடினர். ஆலயங்களின் நேர்ந்தளிக்கும் நாள் என்பது பேராலயத்தின் பிறந்த நாள் என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது. உரோமைத் திருவழிபாட்டு மரபில், அர்ப்பணிக்கப்பட்ட பேராலயத்திற்கான நான்கு விழாக்களை திருச்சபை முழுவதும் கொண்டாடுகிறோம். புனித பேதுரு பேராலயம், லாத்ரன் பேராலயம், புனித பவுல் பேராலயம், புனித மரியாள் பேராலயம். இன்று லாத்தரன் பேராலய அர்ச்சிப்பு விழாவைக் கொண்டாடுகிறோம்.

முதல் நூற்றாண்டில் நீரோ மன்னன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தான். லாத்ரன் என்னும் உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்த பிளவுத்துஸ் லாத்ரன் என்பவரை நீரோ மன்னன் கொன்று அவருக்குச் சொந்தமான மாளிகை, உடைகள் அனைத்தையும் அபகரித்துக் கொண்டான். பின்னர் வந்த உரோமை அரசன் கான்ஸ்டான்டைன் கி.பி. 313ம் ஆண்டு கிறிஸ்தவத்தை நாட்டின் அதிகாரப்பூர்வமான மதமாக அறிவித்து லாத்ரன் குடும்பச் சொத்துக்களை உரோமை ஆயருக்கு (திருத்தந்தை மெல்தியாதஸ்) அன்பளிப்பாக கொடுத்தான். அந்த இடத்தில் இருந்த அழகிய ஆலயத்தைத் திருத்தந்தை 3ம் செர்ஜியுஸ் புதுப்பித்து திருமுழுக்கு யோவானுக்கு அர்ப்பணித்தார். அதனோடு லாத்ரன் குடும்பப் பெயரும் சேர்த்து புனித திருமுழுக்கு யோவான் லாத்ரன் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இதுதான் உரோமை மறைமாவட்டத்தின் தலைமைக்கோயில் (Cathedral). லாத்ரன் குடும்பத்தார் போன்று இறைவனுக்காக நமது உடைமைகளைத் தியாகம் செய்யும் தாராள உள்ளத்தையும் தியாக மனதையும் தரவேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எம்மிடையே பிரசன்னமான தந்தையே, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் உம்முடைய பிரசன்னத்தைக் கண்டு பணி செய்திடவும், உமது முன்னிலையில் முழு உள்ளத்தோடு உமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் உம் அடியார்களுக்கு உமது பேரன்பைக் காட்டி வழிநடத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. என் பெயர் இந்த ஆலயத்தில் விளங்கும் என்று கோவிலைப்பற்றி நீர் சொல்லியிருக்கிறீர். பாரத மக்கள் எல்லோரும் உமது பெயரை அறிந்து உமது பிரசன்னத்தைச் சக மனிதர் வடிவில் கண்டு பாவித்து, அவர்களை மனிதர்களை மதித்து நடக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. விண்ணிலிருந்து எம் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்க்கும் ஆண்டவரே, நாட்டில் பஞ்சம், கொள்ளை நோய், விஷக்காய்ச்சல், மர்மக்காய்ச்சல், டெங்கு போன்ற வியாதிகளால் துன்புறும் மக்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்குப் பூரண சுகத்தைத் தந்து பாதுகாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 12.11.2017 ஆண்டின் பொதுக்காலம் 32ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**I.** சா.ஞா. 6:12-16 **II.** 1தெச 4: 13-18 மத் 25: 1-13

கிறிஸ்துவில் விசுவாசமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று நமது தாயாம் திருச்சபை பொதுக்காலம் 32ம் ஞாயிற்றுக் கிழமையைச் சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. பணம், பதவி, பொருள், புகழ், ஆடம்பரம், பெருமை ஆகிய உலக நாட்டங்களால் ஈர்க்கப்பட்டு, அதற்குள்ளே சிக்கி, சுயநலத்தோடு வாழ்ந்து, இறையரசை இழக்கும் நிலைமைக்கு ஆளாகிறோம். கிறிஸ்துவை மறக்கின்றோம், கடவுளுக்குப் பயப்படுதலே ஞானத்தின் தொடக்கமாகும். நாம் அதன்மீது ஏக்கமாக இருக்க வேண்டும், ஏனெனில் ஞானம் ஒளிமிக்கது, அதைத் தேடுவோரையே அது தேடிச் செல்லும் என சாலமோன் ஞானம் தெளிவாக்குகின்றது. புனித பவுலடியார் தெசலோனியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில், ஆண்டவரின் வருகையைக் கூறுகையில் எதிர்நோக்கில்லாத மற்றவர்களைப்போல் நாமும் துயரம் அடையக் கூடாது என வலியுறுத்துகிறார்.

அதனால், இறைவார்த்தையை ஏற்று, தேற்றிக் கொள்ளும்படி புனித பவுலடியார் வழிகாட்டுகிறார். கிறிஸ்து மீது நம்பிக்கைக் கொண்ட நிலையில் இறந்தவர், வாழ்வோர் மட்டுமே இறையாட்சிக்குத் தகுதி உள்ளவர்கள் என்பதை புனித பவுலடியார் கூறும் அடிப்படையில்தான் மத்தேயு எழுதிய பத்துக் கன்னியர்களின் தகுதியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பத்துக் கன்னியர்களில் தகுதியுள்ளவர்கள் ஐவர் மட்டுமே. மற்ற ஐவர் அறிவிலிகள், முன்மதி இல்லாதவர்கள், ஆதலால் நிலையான இறையாட்சி வாழ்வை இழக்கிறார்கள். எனவே, நமது கிறிஸ்துவ விசுவாச வாழ்க்கையில் நாம் விழிப்பாயிருந்து நிலையான வாழ்வைப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இறையாட்சிக்குத் தகுதியுள்ளவர்களாக எங்களை மாற்றிய இறைவா, இறையாட்சிப் பாதையில் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் விசுவாசத்திற்குச் சான்று பகரும்போது, கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருப்பதே முக்கியம் என்று வலியுறுத்தி வருகிறார். திருத்தந்தையுடன் ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர், பிதாவும் இயேசுவும் ஒன்றாய் இருப்பபோல ஒன்றாயிருந்து திருச்சபையை வழிநடத்தத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிகாட்டும் இறைவா, இந்திய நாட்டை ஆளும் தலைவர்கள், மாநிலத் தலைவர்கள், மக்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர்கள், மக்கள் நலனுக்காக வாழவும், மதச்சுதந்திரம், மனிதநேயம், மனித உரிமைகள் காக்கப்படவும், வன்முறை, கொலை, கொள்ளை, கற்பழிப்புத் தடுக்கப்படவும், ஆட்சியாளர்கள் மக்கள்மீது அக்கறைக் கொண்டு, நல்ல மனப்பான்மையுடன் சேவை செய்யவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பத்துக்கன்னியரில் அறிவிலிகள் ஐவர்போல் இல்லாமல், விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள் என அறிவுறுத்திய இறைவா, உலக முடிவில் நடைப்பெறப் போகும் இயேசுவின் இரண்டாம் வருகையை புனித பவுலடியார் விவரிப்பதுபோல நிலையான இறையாட்சி வாழ்வை இழக்காமல், கிறிஸ்துவ விசுவாச வாழ்க்கையில் விழிப்பாயிருந்து நிலையான வாழ்வைப் பெறத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. தகுதியற்றவர்களை ஞானமே தேடிச்சென்று மகிமைப்படுத்துவது போல, எம்மைத் தகுதியாக்கிய இறைவா, கல்விக் கூடங்களில், அறிவையே முதன்மையாக்கும் நிலைமாறி போதிக்கும் பணி, மனதில் பதியும்படி செய்யவும், மாணவர்கள் ஞாபகசக்தி பெற்று இறை ஞானத்தோடு படித்து உலக ஞானமும் இறை ஞானமும் பெற்று முதன்மைப் பெறவும் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 13.11.2017 தூய அலோசியஸ் வெர்சிலியா, கலிஸ்துஸ் கரவாரியோ திருப்பலி

**முன்னுரை** (சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்)

அலோசியஸ் வெர்சிலியா 1873ஆம் ஆண்டு ஒலிவ ஜெசி என்ற இடத்தில் பிறந்தார். தனது 12ம் வயதில் தொன் போஸ்கோ நிறுவனத்தில் சேர்ந்தார். 1895ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று, பிறகு 10 வருடங்கள் உரோமை நகரிலுள்ள ஜென்சானோவில் நவதுறவற இல்லத்தின் அதிபராக பணியாற்றினார். பின்பு இவர் 1906ஆம் ஆண்டு தொன் போஸ்கோவின் கனவை நனவாக்க சலேசியர்களை அழைத்துக் கொண்டு முதல் முறையாக சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டார். மக்காவு என்னுமிடத்தில் சலேசிய தலைமையகம் ஒன்றை நிறுவினார். மேலும், சியு சோவ் என்ற இடத்தில் மறைப்பரப்பு மையம் ஒன்றை நிறுவி, அதே இடத்தில் 1920ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் நாள் முதல் ஆயராக பொறுப்பேற்றார்.

பிறர்நலமிக்க பணியாளராகவும் தன்னுடைய மந்தைகளுக்கு உண்மையான ஆயராகவும் இருந்து செயல்பட்டார். அவர் தனது மறைமாவட்டத்தை உறுதியான அடித்தளத்தின்மீது உருவாக்கினார். குருமடங்கள், தங்குமிடங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் முதியோருக்கான காப்பகங்கள் போன்றவைகளை நிறுவினார். இவர் தனது ஆயர் பணியை நல்லாயனின் வழியில் செய்து தம் குருக்களை மற்ற பணித்தளத்திற்கு அனுப்புவதற்கு முன்பே ஒவ்வொருவரின் விருப்பத்தையும் கேட்டறிந்து அதற்கேற்ப செயல்பட்டார்.

கலிஸ்துஸ் கரவோரியோ 1903ஆம் ஆண்டு தூரின் நகரிலுள்ள குவோர்னியில் பிறந்தார். இவர் 1922ஆம் ஆண்டு ஆயர் வெர்சிலியாவை சந்தித்து, "நானும் உங்களோடு சீனாவிற்கு வருவேன்", என்று அவர் கொடுத்த வாக்கை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேற்றினார். பிறகு இவர் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். மேலும், இவர் தனது துறவற அர்ப்பணத்தில் மிகுந்த பற்றுறுதியுடன் வாழ்ந்தார். 1930ஆம் அண்டு பிப்ரவரி 25ஆம் நாள் லின் சோவ் மாவட்டத்தில் ஆயர் தனது மேய்ப்புப் பணியை மேற்கொண்டபோது இவரும் இரண்டு ஆசிரியர்களும், இரு பெண் வேதியர்களும் மற்றும் ஒரு மாணவியும் உடன் சென்றனர். அவர்கள் தனிமையான ஓர் ஆற்றிலே சென்றுக் கொண்டிருந்தபோது வழிபறி கொள்ளையர்களால் தாக்கப்பட்டனர். தாங்கள் வழிநடத்திச் சென்ற இளம்பெண்களை வழிபறிக் கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்ற இவர்கள் முயன்றபோது, கொடூரமாக தாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் தங்களின் தியாக உணர்வினால் தூண்டப்பெற்று, நற்செய்தியின் தூதுவர்களாகப் பணியாற்றியதையும், வாழ்வை முழுவதுமாய் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளுக்காக அர்ப்பணித்ததையும், உண்மை மற்றும், நீதியை நிலைநாட்டியதையும், ஏழைகளுக்கும் மற்றும் வலிமையிழந்தோர்க்கும் நம்பிக்கையூட்டியதையும், பாவத்தையும், இறப்பையும் வெற்றி கொண்டவர்களாய் வாழ்க்கையை அர்ப்பணித்ததையும் கண்டுணர்ந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவர்கள் இவருரையும் 1983ஆம் ஆண்டு மே 15ஆம் நாள் சலேசிய சபையின் முதல் மறைசாட்சிகளாக அறிவித்து, பின்னர் 2000ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் புனிதர்களின் நிலைக்கு உயர்த்தினார்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்ந்து, வெற்றி வீரர்களான புனித அலோசியஸ் வெர்சீலியா மற்றும் கலிஸ்துஸ் கரவாரியோ தரும் முன்மாதிரியைப் பின்பற்றி, பல இன்னல்கள் மத்தியிலும் இறையாட்சிக்கான விதைகளை விதைக்கவும் தங்கள் பணிகளைத் தாராள மனதுடனும், திறமையுடனும் நிறைவேற்றவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மறைப்பரப்பு பணியாளர்கள் தங்களின் வாழ்வில் சந்திக்கும் துன்பங்கள் அலையென திரண்டுவரினும், இயேசுவின்மேல் அதிமிகு தாகம் கொண்டு, நற்செய்தியின் விதைகளை விதைத்து மக்களின் உள்ளங்களில் உண்மை, நீதி, நேர்மை, சமாதானம், ஒற்றுமை இவற்றால் நிரப்பி வாழ்வில் புத்துணர்வும் புதுவாழ்வும் பெற்றவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இன்றைய இளைய தலைமுறையினர் உண்மையான இறைநம்பிக்கையில் ஊன்றி வாழவும், இலட்சியத் துணிவோடு வாழ்வின் போராட்டங்களைச் சந்திக்கவும், சமூக மாற்றத்திற்காக உழைக்கவும், வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மறைச்சாட்சிகளாக வாழ்ந்து, வாழ்வில் வெற்றி கண்ட புனித அலோசியஸ் வெர்சிலியா, மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ இவர்களின் முன்மாதிரியினால் தூண்டப்பெற்று, சலேசிய குடும்பத்தினர் அனைவரும் வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும், இடையூறுகளையும், சோதனைகளையும் முறியடித்து தூய வாழ்வு வாழ்வதற்கான அனைத்து அருள்வரங்களையும் பெற்று வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.11.2017 அருளாளர் மதலேனா மொரானோ திருப்பலி

**முன்னுரை** (சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்)

அருளாளர் மதலேனா மொரானோ 1847ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் நாள் தூரின் மாநகரில் உள்ள கியேரி என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் தன் இளம் வயதிலேயே தனது கிராமத்து சிறார்களுக்கு நற்போதனைகளைக் கற்றுக்கொடுத்தார். இதுவே பிற்காலத்தில் சலேசிய சபையில் இவர் ஆற்றிய ஆசிரியைப் பணிக்கு பயிற்சியாக இருந்தது. தான் புதுநன்மை வாங்கிய நாளன்றே இறைவனுக்குத் தன்னையே அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். தொன் போஸ்கோவின் பயணத்தில்தான் புனிதமாகும் வரை வாழ வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடினார். இவர் சிசில்கு என்ற தீவில் 1881ஆம் ஆண்டு இளையோருக்காக, குறிப்பாக உழைக்கும் இளம் பெண்களுக்காக கல்விப் பணியை ஆற்றினார்.

"ஒரு பார்வை மண்ணகத்தையும் பத்து பார்வை விண்ணகத்தையும் நோக்கியவண்ணம்" பயிலகங்கள், கல்விக்கூடங்கள், ஆரட்டரிகள், விடுதிகள் மற்றும் தையற்கூடங்களையும் தீவு முழுவதும் நிறுவினார். அவற்றில் நிலவிய ஆன்ம தாகம், பணி ஆர்வம், தம் நிறுவனங்களில் உருவாக்கிய அன்பான சூழல் ஆகியவை பல இளம் பெண்களைத் துறவற வாழ்விற்குப் பெரிதும் தூண்டின. இவரது அருமையான மேய்ப்புப் பணியை பல்வேறு ஆயர்கள் பாராட்டி, தங்களது மறைமாவட்டங்களிலும் மறைக்கல்விப்பணி, மறைப் பரப்புப்பணி ஆகியவற்றை மேற்கொள்ள இவருக்கு அழைப்பு விடுத்தனர்.

இவர் கத்தானியா என்ற இடத்தில் இருக்கும்போது புற்று நோயினால் தாக்கப்பட்டு, 1908ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். "எனது சுயநலத்தினால் இறைவனுடைய திட்டத்திற்கு எதிராக ஒருபோதும் செயல்பட மாட்டேன்" என்று இவர் எடுத்துக்கொண்ட தீர்மானத்தால் கடைசிவரைக்கும் உறுதியாக நிலைத்திருந்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 1994ஆம் ஆண்டு

நவம்பர் 5ஆம் நாள் கத்தானியா என்ற நகரிலேயே அருளாள் நிலைக்கு உயர்த்தினார். இவரது பிறந்த நாளையே திருச்சபை நினைவு நாளாகச் சிறப்பிக்கின்றது.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. மறை உண்மைகளாலும், அருள் அடையாளங்களாலும் புனிதமாகத் திகழும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களிடம் தூய ஆவியினால் நிறைக்கப்பெற்ற புனிதத்துவத்தைப் பிரதிபலிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அருளாளரான மதலேனா மொரானோவின் எடுத்துக்காட்டான வாழ்வினால் ஒவ்வொரு சலேசிய சகோதரியும் தங்களது அர்ப்பண வாழ்வின் நெறிமுறைகளுக்கேற்ப பிரமாணிக்கமாக வாழ்ந்து, தாராள உள்ளத்தோடு இளையோருக்குப் பணி செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் நற்செய்தி அறிவிக்கும் கல்விக் கூடங்களாகவும், இறைப்பணியைத் தொடரும் துறவற வாழ்வின் பிறப்பிடங்களாகவும் திகழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 18.11.2017 தூய பேதுரு, தூய பவுல் ஆலயம் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

"ஆலயத்திற்கு அருகிலிருப்பவர் இறைவனை தரிசிக்க இறுதியாகத்தான் வருவர்" வாழ்வு வரலாறாக மாறுகிறது. வரலாறு வாழ்வாக மாறவேண்டும். இப்படித்தான் புனித பேதுருவும் பவுலும் வாழ்ந்து, இறை இயேசுவுக்குச் சான்று பகர்ந்தார்கள், துணிவோடு யாரும் அறிவிக்காததைப் புனித பவுல் "நான் இயேசுவாகவே வாழ்கிறேன்" என்று அறிவித்தார். பேதுருவோ அதைவிட மேலாகச் சென்று சிலுவையில் தலைகீழாக மரித்தார். இதைத்தான் வாழ்வோருக்கெல்லாம் இப்பேராலய விழா இன்று பறைசாற்றுகிறது. உரோமையில் புனித பேதுருவின் கல்லறையின்மேல், வத்திக்கான் குன்றின் அடிவாரத்தில் ஒரு சிற்றாலயம் 83ம் ஆண்டில் திருத்தந்தை புனித அனனாகளீட்டாசு என்பவரால் கட்டப்பட்டது. இங்குதான் புனிதரின் திருப்பண்டங்கள் புனிதமாக வைக்கப்பட்டுள்ளன. நாளடைவில் மாமன்னன் கான்ஸ்டான்டைன் மிகப்பெரிய பேராலயம் ஒன்றை அதே இடத்தில் எழுப்பினார். 16ம் நூற்றாண்டில் உலகப் புகழ் பெற்ற மைக்கேல் ஆஞ்சலோவின் யுக்தியின்படி இப்போது காட்சியளிக்கும் பேராலயம் எழுப்பப்பட்டது. 50,000 பேர்களுக்கு இடமளிக்கக் கூடிய இப்பேராலயத்தை இதே நாளில் திருத்தந்தை 7வது அர்பன் புனிதப்படுத்தினார்.

திருத்தந்தை புனித அனாக்ளீற்றரசு புனித பவுலின் நினைவாக வேறொரு பேராலயம் எழுப்பினார். ஒசுடியா நகர் நோக்கிச் செல்லும் சாலையில் இது அமைந்துள்ளது. 395ல் கட்டப்பட்ட இப்பேராலயம் 400 அடி நீளமானது. இதற்கு தியடோசியன் பேராலயம் என்னும் பெயர் சூட்டப்பட்டது. 1823ல் பெரியதோர் நெருப்பு இவ்வாலயத்தை சேதப்படுத்தவே இதற்கு முன் இருந்ததைவிட அதிக கம்பீரமாக புதுப்பிக்கப்பட்ட பேராலயம் இந்நாள் வரை காட்சியளிக்கிறது. 1854ல் அன்னை மரியாவின் அமல உற்பவம் பிரகடணப்படுத்தப் பெற்ற நாட்கள் கழித்து இவ்வாலயம் திருத்தந்தை 9ம் பத்திநாதரால் அர்ச்சிப்பு செய்யப்பெற்றது. நாமும் அந்த ஆலயங்களே. மூவொரு இறைவன் நமது ஆன்மாவை கோவில் கொள்வதால், நாம் அதற்கு எத்தகைய மதிப்புத் தரவேண்டும். இத்திருப்பலியில் புனிதத்தில் வளர்ச்சி பெற வேண்டும் என்பதைச் சிந்திப்போம் ஜெபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, மனிதம் புனிதமாக வாழ இறைவன் அழைத்தார். அதையே இன்றுள்ள எம் திருத்தந்தை பிரான்சிசும் தனது வாழ்வின் வழியாக அறைகூவல் விடுக்கிறார். ஆகவே இறைவா எம் திருத்தந்தைக்கு நீர் அரணும் கோட்டையுமாக இருந்து பாதுகாத்து உம் வல்லமையால் நிரப்பி வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆற்றலே இறைவா, எம் திருஅவையின் பணியாளர்களாகிய கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இறை வழிகாட்டுதலின்படி வாழ்ந்து நல் ஆலயங்களாக மாற வேண்டிய அருளைப்பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, எமது பங்கு, மறைமாவட்டம், மறைவட்டம், தமிழக திருஅவை, இந்திய அகில உலக திருஅவை அனைத்தும் அதிலுள்ள மக்களும், இன்பத்திலும் துன்பத்திலும் இறை இயேசுக்குச் சான்று பகர்ந்து வாழ்வில் உயர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 19.11.2017 ஆண்டின் பொதுக்காலம் 33ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

**I.** நீமொ. 31:10-13,19-20,30-31 **II.** 1தெச 5: 1-6 மத் 25: 14-30

"திறமைகளைத் திறம்படப் பயன்படுத்துவோம்"

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் திறமைகளைத் திறம்பட செயல்படுத்தி, அவற்றின் வழியாக இறையருளைப் பெறவும் தெளிவான விழிப்புணர்வோடு வாழவும் நமக்கு கற்றுத்தருகின்றன. தன்னுடைய வேலைகள் அனைத்தையும் தானே செய்துக்கொள்ளும் மனையாளை நமக்குச் சுட்டிக்காட்டி அவளின் பொறுப்புமிக்க உழைப்பை முதல் வாசகம் பாராட்டுகிறது. மேலும் கணவனும், மனைவியும் கருத்தொருமித்து

வாழ்வது கிறிஸ்துவும் திருச்சபையும் அன்பு செய்வதை ஒத்தது என்கிறது. இரண்டாம் வாசகத்தில் ஆண்டவர் எப்போது வருவார் என்று திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும் கண்டிப்பாக வருவார் என்ற உண்மையை தெளிவுப்படுத்துவதோடு நம்மை, நாமே இரண்டாம் வருகைக்காகத் தயாரித்துக் கொள்ளவும், ஒளியின் மக்களாக வாழவும் அழைப்பு விடுக்கிறது. எருசலேம் அழிவும் உலக முடிவும் இயேசுவின் இரண்டாம் வருகையும் எப்போது நடைபெறும் என வானதூதரும், ஏன் மானிட மகனும்கூட அறியார் என்று கூறி தாலந்து உவமை வழியாக மீட்புப்பெற நமக்கு கடுமையான உழைப்புத் தேவை என்பதை இயேசு தெளிவுப்படுத்துவதை நற்செய்தி வாசகப் பின்னனி தெளிவுப்படுத்துகிறது.

மேலும் இன்றைய நற்செய்தியில் தாலந்து உவமையின் வழியாகக் கடவுள் நமக்குத் தந்துள்ள வரங்களையும் கனிகளையும் மூலதனமாக வைத்து, வாழ்க்கையில் முன்னேற முயற்சி செய்ய வேண்டுமென்ற அவசியத்தை இயேசு தெளிவுப்படுத்துவதோடு, தனக்குக் கொடுக்கப்பட்ட திறமைகளைத் தகுந்த விதத்தில் பயன்படுத்தாதவர்களும், பலன் அளிக்காதவர்களும் கண்டனத்திற்கு உள்ளாவார்கள் என்ற எச்சரிக்கைகளையும் நற்செய்தி வாசகத்தின் உவமை வழியாக இயேசு தருகிறார். எனவே ஆண்டவரை எதிர்கொள்ளும் விழிப்புணர்வையும், திறமைகளையும் திறம்படப் பயன்படுத்தி இறையருளைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு தந்தையே, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவருக்கும் நல்ல உடல், ஆன்ம நலம் தந்து ஆசீர்வதித்தருளும். இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையின் மக்களை ஒளியின் பாதையில் நடத்தி, இறுதியில் இறைவனை எதிர்கொள்ளும் வரத்தை பொழிந்தருள இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, எங்கள் நாட்டை ஆள்பவர்கள் சுயநலமின்றி அனைவரையும் வழிநடத்தவும், பிறருடைய உழைப்பில் தங்களை முன்னேற்றிக்கொள்ளும் குறுகிய மனப்பான்மையிலிருந்து விடுதலைப் பெறவும், தாங்களும் உழைத்து, பிறரும் உழைக்கும் வாய்ப்பினைத் தரவும், தம்மிடமுள்ள திறமைகளை அழிவிற்குப் பயன்படுத்தாமல் ஆக்கத்திற்கு பயன்படுத்தும் நல்மனதைப் பெறவும் உம்மை மன்றாடுகிறோம்.

3. இறையாட்சியின் ஊற்றே இறைவா, இவ்வுலகில் வாழும் அனைவரும் ஓர் நாள் உம்மிடம் வந்து சேர வேண்டுமென்ற உண்மையை உணரவும், அதற்காகத் தங்களையேத் தயாரிக்கவும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை உண்மையான கடமையுணர்வோடு

செய்யவும், தங்களின் உழைப்பின் வழியாக, தங்களுக்கும் பிறருக்கும் பயனுள்ளவர்களாக வாழவும் வேண்டிய இறையருளைப் பெற உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வு தரும் இறைவா, குடும்பத்தலைவிகள் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல், குடும்பங்களையும் குழந்தைகளையும் நல்வழியில் நடத்திடத் தேவையான அருளைப் பெறவும், சுமூகமான குடும்பச் சூழ்நிலையை அவர்கள் உருவாக்கவும், எல்லா நேரங்களிலும் இறைவனைச் சார்ந்து வாழவும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.11.2017 தூய கன்னிமரியா காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி சம்பந்தன்

அன்பார்ந்த இறைமக்களே, இன்றைய தினத்தை திருஅவையானது தூய கன்னிமரியாள் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட தினமாகச் சிறப்பிக்கிறது. தனது 3 வயதிலேயே தூய கன்னிமரியாள், புனித சுவக்கின் அன்னம்மாள் இருவருடனும் தேவாலயம் சென்று அங்கு இறைவனுக்குக் காணிக்கையாக அர்ப்பணமாக்கப்பட்டிருக்கிறார். அக்காலத்தில் யூத மக்கள் தங்களுக்குப் பிறக்க இருக்கும் குழந்தைகளை கடவுளின் சேவைக்கென்று கையளிப்பதாக வாக்குறுதி அளிப்பார்கள். குருவிடம் ஒப்படைத்தபின், கடவுளின் சேவைகளுக்கு அதாவது திருவழிபாட்டு ஆராதனைச் சடங்குகளில் பங்கு பெறும் பயிற்சிகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டு கடவுளுக்குச் சேவை செய்வார்கள். இவ்வாறே தூய கன்னிமரியாளும் தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் செய்தார். தன் தாய் தந்தையரை விட இறைவனை அதிகமாக நேசித்தார்.

6வயதில் தந்தை மரிக்க, 8வயதில் தாயும் மரித்தவுடன், பன்னிரண்டு வயது வரை ஆலய பணிகளில் பங்குபெற்றார். பின் பாதுகாவலராக புனித சூசையப்பர் நியமிக்கப்பட இறைவனின் சேவையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்தான் நமது அன்னை தூய கன்னிமரியாள். இவ்விழாவை கிரேக்க மக்கள், இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா என்று கொண்டாடுகின்றனர். இவ்விழா முதலில் கி.பி. 600ம் ஆண்டிலே கிழக்கு பக்க மக்களால் சிறப்பிக்கப்பட்டு, பின்னர் கி.பி. 1600ம் ஆண்டில் தான் உலகெங்கும் கொண்டாடத் தொடங்கியது. பெற்றோரைவிட இறைவனை அதிகமாக நேசித்த நம் அன்னையை பிதாவாகிய தந்தை, இயேசுவின் அன்னையாக்கினார். நாமும் நமது அன்னை வழியில் இறைவனை அன்பு செய்து நம்மையே அன்னையிடம் அர்ப்பணித்து ஆசிபெற இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவரே எம் இறைவா, தன் ஒரே மகனை சிலுவைச்சாவுக்குக் கையளிக்கும் அளவுக்கு உம் சித்தத்தை நிறைவேற்றிய அன்னைமரியாளின் விசுவாசத்தை, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் பொழிந்து, அவர்கள் அர்ப்பண வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. தியாகத்தின் அர்ப்பணமே இறைவா, "இதோ உன் தாய்" என்று மரணத்தருவாயில் சிலுவையில் தொங்கியபடி வாக்குரைத்ததால் உம் தாயான அன்னை மரியாளின் அன்புக்கு அடிப்பணிந்து அவரை போற்றவும், பயபக்தியுடன் வணங்கவும், வேண்டிய மன எழுச்சியைத் தரவேண்டுமென்று புனித கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் இறைவா, இப்பரந்த உலகின் சூழலில், குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள், தீராத கவலைகள், தோல்விகள், நோய்கள், கடன் தொல்லைகள் இவைகளைச் சந்திக்கும்போது உமது தாயின் அர்ப்பண உணர்வு எங்களை ஆட்கொள்ளவும் உம் தாயின் பரிந்துரையால் நோய்கள் அகலவும் தூய கன்னி மரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 22.11.2017 தூய செசிலியா விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஹென்றி ஸ்டீபன்

இன்றைய திருப்பலிக்கு வருகைத் தந்திருக்கும் இறையன்பர்களே, தூய செசிலியா விழாவைக் கொண்டாட திருச்சபை நம்மை அழைக்கிறது. இவர் உரோமையில் பிறந்தவர். சிறுவயதிலேயே தன் கன்னிமையைக் கடவுளுக்கு அர்ப்பணித்ததால் திருமணம் செய்ய விரும்பவில்லை. "கடவுளின் தூதர் என்னை அன்பு செய்கிறார், அவரே எனது உடலைத் துணிச்சலுடன் காத்துக்கொள்கிறார்" என்று கூறி கற்பு நெறியில் வாழ்ந்து வந்தார். இவரது விசுவாசத்தையும் இறைபக்தியையும் மிக இனிமையாகவும் நேர்த்தியாகவும் பண்ணிசைத்த குரல் வளத்தையும் அறிந்த உரோமை ஆளுனன் தனது அதிகாரி மூலம் செசிலியாவைச் சிறைப்படுத்தினான். பல கொடிய சித்திரவதைகளைப் பெற்றாலும், "இயேசுவின் புனிதப் பெயரை அறிக்கையிடுவேன், அவரை மறுதலிக்கமாட்டேன்" என்று கூறியதால் கழுத்து வெட்டப்பட்டு தன் ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார்.

கி.பி. 230ம் ஆண்டில் மறைச்சாட்சியாக மரித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதன்பின் இவரது பேரும் புகழும் உலகம் முழுவதும் பரவியது. உரோமையில் 5ம் நூற்றாண்டில் இவரது பெயரால் ஒரு பேராலயம் கட்டப்பட்டது. மேலும் ஆலயப் பாடற்குழுவினரின் பாதுகாவலி என்று இவர் அழைக்கப்பட்டார். இன்றைய திருப்பலி நற்செய்திக்கேற்ப இறைவன் நமக்குக் கொடுத்த திறமைகளை இம்மண்ணுலகில்

பயன்படுத்தாதவர் விண்ணுலகில் கணக்குக் கேட்கப்படுவார். திறமைகள் இறைவன் மனிதனுக்கு அளிக்கப்பட்ட அருட்கொடைகள். இவற்றைப் பிறரும் அனுபவித்து வாழ உதவி செய்வோம். பெற்ற கொடைகளை பாரபட்சமில்லாமல் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் கருவிகளாக நாம் மாற இத்திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. என்றும் வாழும் இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் மக்களை நிறைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பணியைச் சிறப்பாகச் செயலாற்றிடத் தேவையான வரங்களைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் இறைவா, உம்மிடமிருந்து கருணையையும் அன்பையும் கொடையாகப் பெற்று மகிழும் நாங்கள் எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களைத் தாராள மனதுடன் மன்னிக்கக் கூடிய மனப்பக்குவத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. புகழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் உரிய இறைவா, ஆலயப் பாடற் குழுவினரையும், மற்றும் நல்ல குரல் இனிமை உள்ளவர்களையும், இசைக்கருவிகளை மீட்டுபவர்களையும் நிறைவாய் ஆசீர்வதியும். இவர்கள் பெற்ற இசைத் திறனின் மூலம் உம்மைப் போற்றிப் புகழ்ந்து பாடவும், அதன் மூலம் தங்களையும், இறைமக்களையும் உம்பால் ஈர்க்கவும் வேண்டிய இசை ஞானத்தையும் தூய உள்ளத்தையும் அருளவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 26.11.2017 கிறிஸ்து அரசர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I எசா. 34:11-12,15-17 II 1கொரி 15: 20-26,28 மத் 25: 31-46

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மனிதராக உருவெடுத்தார், நன்மைகளைச் செய்தார், தீமைகளைச் சாடினார், உண்மையை உரைத்தார். அவ்வாறே நன்மைகளைச் செய்ய நம்மையும் அழைத்தார். அவரை முன்னிட்டே அனைத்தையும் செய்யும் நாம், அவரை முன்னிட்டே அவருடன் உயிரோடு எழுப்பப்படுவோம் என்கிறார் பவுலடியார். நமது கிறிஸ்து அரசரின் ஆசிபெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி நமக்குத் தெளிவுப்படுத்தியுள்ளது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, ஓர் அரசராக இருந்து நல்லவர்களையும் தீயவர்களையும் பிரித்தெடுத்து நீதித்தீர்ப்பு வழங்குவார்.

கிறிஸ்துவ மறையைப் பொறுத்தவரையில் இறைவனின் ஆசிபெற நம்மிடமுள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதைத் தவிர வேறு வழிகிடையாது. எவ்வாறெனில் பசித்தவர்களுக்கு உணவு

கொடுப்பவர்கள், தாகமாயிருப்பவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பவர்கள், அன்னியரை ஏற்றுக்கொள்பவர்கள், ஆடையின்றி இருப்பவர்களுக்கு ஆடை அணிவிப்பவர்கள், நோயுற்றோரைக் கவனிப்பவர்கள், சிறையிலிருப்பவர்களைத் தேடிச்செல்கிறவர்கள் ஆகிய அனைவரும் கடவுள் வாழும் இல்லத்திற்குள் நுழையும் பேறு பெற்றவர்கள் என்றும், கிறிஸ்து அரசரின் ஆசிப்பெற்றவர்கள் என்றும் இன்றைய நற்செய்தி தெளிவாக அறிவுறுத்துகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நிலைகுலையாமல் ஓர் அரசு இருக்கின்றது என்றால் அது ஆண்டவர் இயேசுவின் அரசுதான். கத்தியில்லாமல், பீரங்கியில்லாமல், இராணுவப் பலம் இல்லாமல் முளைத்த அரசு இன்றும் பூமியை ஆளுகிறது என்றால் அது கிறிஸ்து அரசரின் அரசாட்சிதான். இயேசுவை நம் உள்ளத்தின் இல்லத்தின் அரசராக ஏற்க வேண்டுமென்றால் கிறிஸ்து அரசரின் அரசாட்சிப் பண்புகளாம் அன்பு, நீதி, உண்மை, மன்னிப்பு, இரக்கம் போன்றவைகளை நமது வாழ்வில் கடைபிடிக்கும்போது கிறிஸ்துவின் அரசு நமது வீடுகளிலும், வீதிகளிலும், பரவச் செய்வோம். அதற்காக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்புத் தந்தையே இறைவா, நீர் விட்டுச்சென்ற திருச்சபை என்னும் மந்தையை வழிநடத்த நல்ல ஆயனாக நீர் தெரிந்துக்கொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் போன்ற வழிகாட்டிகளுக்கு நல்ல ஆன்ம சரீர சுகமளித்து, இன்றைய காலகட்டத்தில் இவர்களுக்கு நேரிடும் இடையூறுகளிலிருந்து பாதுகாத்து என்றும் கிறிஸ்துவின் அரசில் நிலைத்து நிற்கும் வரம்தர உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் அரசே இறைவா, எங்கள் நாட்டையும், சமுதாயத்தையும் வழிநடத்தும் தலைவர்கள் சுயநலமின்றி நாட்டையும், மக்களையும் பாதுகாக்கும் நல்ல மனதையும், தைரியத்தையும் தந்து நீதியும், நேர்மையும், உண்மையுமான ஆட்சியாளராக அவர்களை உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் அரசரே இறைவா, நாங்கள் அனைவரும் இயேசுவின் இதய அன்பிலும், பிறரன்பிலும் வளர்ந்து சமூக அக்கறையுடன் செயல்பட்டு உமது இதயத்திற்கு நெருக்கமான இறையாட்சியைக் கட்டியெழுப்பிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. கிறிஸ்து அரசரே இறைவா, இன்றைய நாட்களில் திருச்சபைக்கும், கிறிஸ்துவ மக்களுக்கும் இழைக்கப்படுகின்ற அநீதி, கொடுமைகள், வன்முறைகள், கிறிஸ்துவையும், கிறிஸ்துவ மக்களையும் இழிவுப்படுத்துதல் போன்ற செயல்களின்போது நாங்கள்

மனந்தளராமல் உமது உதவியோடு இறுதிவரை உமது உண்மையான அரசாட்சியில் நிலைத்து நின்று உமக்குச் சாட்சி பகரவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.11.2017 தூய அந்திரேயா திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் சுரேஷ்

இயேசு கிறிஸ்துவில் அன்பான இறைமக்களே, இன்றைய நாளில் நாம் திருத்தூதர்களுள் ஒருவரான தூய அந்திரேயாவின் திருவிழா திருப்பலியினைக் கொண்டாட இங்குக் கூடியுள்ளோம். இயேசுவின் முதல் சீடர் இவரே. தூய திருமுழுக்கு யோவானின் சீடராயிருந்து இயேசு திருமுழுக்குப் பெற்ற பின்னர், இயேசுவின் சீடரானார். இரவும் பகலும் அவருடன் வழிநடந்தவர். தனக்குக் கிடைத்த அருள்வரம் தன் அண்ணன் சீமோன் பேதுருவுக்கும் கிடைக்கும்படி செய்தவர். இறைமகன் இயேசு அப்பங்களைப் பலுகச் செய்த சமயத்தில் நமது தூய அந்திரேயாதான் 5 அப்பங்களும் 2 மீன்களும் வைத்திருந்த சிறுவனை இயேசுவிடம் அழைத்து வந்தவர். எனவேதான் இவருக்கு "கிறிஸ்துவை அறிமுகப்படுத்தியவர்" என்று புகழ்மாலை சூட்டப்படுகிறது. தூய ஆவியானவரைப் பெற்று பல நாடுகளில் வேதம் போதித்து இவரை சிலுவையில் அறைந்து கொல்ல நினைத்தபோது சிலுவையைக் கண்டதும், "ஓ விலையேறப்பெற்ற சிலுவையே வாழ்க என் ஆண்டவரின் உடலை ஆபரணமாக அணிந்துக்கொண்ட உம் கரங்களில் என்னை ஒப்படைக்கிறேன்" என்று கூறி மரணத்தை ஏற்றுக்கொண்டார். இவரைப் போல் நாமும் கிறிஸ்துவுக்குப் பிறரை அறிமுகப்படுத்த முன்வருவோம். இயேசுவை அறியாத பிற மக்களை இயேசுவுக்கு அறிமுகப்படுத்துவோம் என்ற இலட்சியத்துடன் இத்திருப்பலியில் பங்கேற்று இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அழைக்கப்பட்டவர் பலர், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர் என்னும் வார்த்தைக்கேற்ப எம் தாய்த் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், கன்னியர்கள் அனைவரும் நற்செய்தியை வாழ்வாங்கு வாழ வரமருள வேண்டுமென்று தூய அந்திரேயா பரிந்துரையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்லாயனே எம் இறைவா, நீர் எவ்வாறு உமது மந்தையைக் காக்கின்றீரோ அதுபோல் எம் நாட்டையாளும் தலைவர்கள் உண்மையுடனும், நீதியுடனும் மக்களுக்குச் சேவையாற்றிட அருள்புரிய வேண்டுமென்று தூய அந்திரேயா பரிந்துரையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. நான் இவ்விடத்திலிருந்து உனக்கு ஆசி வழங்குவேன் என்ற எம் இறைவா, இங்கு கூடியுள்ள அனைவரையும் நீர் நிறைவாக ஆசிர்வதித்து நற்செய்தியை அறிவிப்பவர்களாகவும், கிறிஸ்துவை அறிமுகப்படுத்துபவர்களாகவும் தூய அந்திரேயாவைப்போல் வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## 1. கல்லறைத் திருநாள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

உலகில் அழுகையோடுத் தொடங்குகிற பிறப்பு, பலரை அழவைத்து மரணத்தில் முடிக்கிறது. தாலாட்டுப் பாடலோடுத் தொடங்குகிற வாழ்க்கை ஒப்பாரிப் பாடலோடு முடிவடைகிறது. ஒருவருக்கு மட்டுமே (தாய்க்கு மட்டுமே) சுமையாக மலர்கின்ற வாழ்க்கை நால்வர்க்கு சுமையாக மாறி முடிவடைகிறது. தொப்புள் கொடி அறுத்து பிறக்கின்ற உறவு கோடித்துணி உறவோடு முடிவடைகிறது. இத்தனை மாற்றங்களைக் கண்ட மரணம், மாறாதது, அது இயற்கையானது. மறுத்தாலும் யாரையும் விடாது. இந்த மரணம் கடவுளைச் சந்திக்க ஆன்மாக்களின் புறப்பாடாக அமைகின்றது.

படித்தவன்-பாமரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், பணக்காரன்-ஏழை என்று ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இவ்வுலகில், மரணம் மட்டுமே சமத்துவத்தின் முன்னோடி, வஞ்சனையில்லா ஒன்று. ஏழைக்கு இத்தனை ஆண்டுகள், பணக்காரனுக்கு இத்தனை ஆண்டுகள் என்று பகுத்து வைப்பதில்லை. இளமை, அழகு, அறிவு, உறவு என்று வெளித்தோற்றம் பார்ப்பதில்லை. விருப்பும் வெறுப்பும் மரணத்திற்குக் கிடையாது. மரணம் அனைவருக்கும் என்பது மட்டும் திண்ணம். ஆனால் எப்போது யார் வீட்டுக் கதவைத் தட்டும் என்பது மட்டும் யாருக்கும் தெரியாது.

மனித வரலாற்றிலே முதன் முதலில் மரித்த ஆபேல், கொலையுண்டார். தொ.நூ. 5: 5ல் தான் ஆதாமின் இயற்கையான இறப்புச் செய்தி இடம் பெறுகிறது. தொடர்ந்து 31 திருவசனம் வரை பலர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்து இறந்தனர் என்பதும் இடம் பெற்றுள்ளது. ஆனால் அவர்கள் எங்கே, எவரால், எப்படி அடக்கம் செய்யப்பட்டார்கள் என்ற குறிப்பு இல்லை. தொ.நூ. 23:1-20 வரையிலான திருவசனங்களில் தான் கல்லறை நிலம் பற்றிய செய்தியை முதன் முதலாக அறிய வருகிறோம். "கல்லறைகள்" (கல் + அறைகள்) ஆபிரகாம் தன் மனைவி சாராளை அடக்கம் செய்வதற்காக 400 வெள்ளிக்காசுகள் கொடுத்து இவ்விடத்தை வாங்கி அடக்கம் செய்தார்.

175 வயதில் இறந்த அபிரகாமும் அதே குகையில் தான் அடக்கம் செய்யப்பட்டார் (தொ.நூ. 25:7-10). தொடர்ந்து தொடக்க நூலில் யாக்கோபின் மனைவி ராக்கேல் பெத்லகேம் என்ற எப்ராத்திற்குச் செல்லும் வழியிலும், ஈசாக்கை அவரின் புதல்வர்கள் ஏசாயும், யாக்கோபும் கிரியாத்து அர்பா என்ற இடத்திலும், அதே இடத்தில் ஈசாக்கையும் அவர் மனைவி இரபேக்காளையும், யாக்கோபின் மனைவி லேயாவையும், யாக்கோபையும் அடக்கம் செய்தனர். யூதாவை அவரின் சகோதரர்களான யோனத்தானும், சீமோனும் மோதயின் நகரில் தங்கள் மூதாதையரின் கல்லறைகளில்

அடக்கம் செய்தனர் (1மக் 9:19). குகைகளில், கல்லறைகளில் அடக்கம் செய்தது பற்றி பழைய ஏற்பாட்டில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள் என்று மாற்கு எழுதுகிறார் (மாற் 6:29). இலாசரின் அடக்கம் பற்றி கூறும் போது "இயேசு அங்கு வந்த போது இலாசரைக் கல்லறையில் வைத்து ஏற்கனவே நான்கு நாட்கள் ஆயிருந்தன" (யோவா11:17). இயேசுவின் அடக்கம் பற்றி நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு அவ்வுடலைப் பெற்று மெல்லிய துணியால் சுற்றி தமக்கென பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் போய் வைத்தார்" என்று தங்களுக்கே உரிய பாணியில் எழுதியுள்ளனர். திருத்தூதர் பணிகள் எனும் நூலில் லூக்கா, முதல் மறைச்சாட்சியான ஸ்தேவானின் உடலை இறைப்பற்றுள்ள மக்கள் அடக்கம் செய்தனர் என்று குறிப்பிடுகிறார் (தி.ப. 8:12).

ஆபிரகாமின் மனைவி சாராள் முதற்கொண்டு, முதல் மறைசாட்சியான ஸ்தேவான் வரையிலான அனைவரின் இறப்பு, குகை, கல்லறைகளில் அடக்கம் பற்றி பழைய, புதிய ஏற்பாடுகளில் பார்த்தோம். "மரணமே, உனக்கும் ஓர் நினைவு நாள்", இன்று நாம் நவம்பர் 2-ஆம் நாளை, அனைத்து ஆன்மாக்களின் நாளாக அல்லது இறந்தோர் தினமாக சிறப்பித்து வருகிறோம். இந்த நாள் "கல்லறைத் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நினைவு நாள் கல்லறைத் திருவிழா" என வழக்கத்திற்கு வந்தது எப்படி?

திருச்சபையின் தொடக்க காலம் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமையில் ஏற்பட்ட வேதகலாபனையில் பலரும் இயேசுவுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டனர். குறிப்பாக திருச்சபையின் தூண்கள் எனப்படும் புனித பேதுரு மற்றும் புனித பவுலின் கல்லறைகள் மக்கள் விரும்பிச் சந்திக்கும் இடங்களாக மாறின. காலம் செல்லச் செல்ல மறைசாட்சிகளாக இறந்த இவர்களின் கல்லறைகளில் சிற்றாலயங்கள் கட்டி திருப்பலியும் நிறைவேற்றினர். கி.பி மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு, திருச்சபை உரோமையில் வேரூன்ற ஆரம்பித்தப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சாட்சிய வாழ்வை நினைவு கூர்ந்து மக்கள் விழாக் கொண்டாடி அவர்களின் கல்லறைகளைச் சந்தித்து வந்தனர். ஆனால் திருச்சபையில் இது ஒரு பொது விழாவாகவோ, அகில உலகத் திருச்சபையின் விழாவாகவோ மாறவில்லை. கி.பி. 998ல், புனித ஓதிலோ என்பவர் குளுனி சபையின் முதல் மடாதிபதியாய் இருந்தார். தன்னுடைய துறவற சபையில் வாழ்வோர், இறந்தோருக்காகச் சிறப்பான செபங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக இவ்விழாவை அறிமுகப்படுத்தினார். பதினோராம் நூற்றாண்டில் குளுனி சபையினரின் இவ்வழக்கம் ஐரோப்பிய நாடுகளிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மிக விரைவாகப் பரவியது.

இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடும் இவ்விழாவைத் தாய் திருச்சபை 13-ஆம் நூற்றாண்டில், அனைத்துலகின் விழாவாகக் கொண்டாட அனுமதி வழங்கியது.

இந்த கல்லறைத் திருவிழா பல உண்மைகளை நமக்குப் பாடமாகத் தருகிறது. கல்லறைகள் நமது உணர்வுகளின் பெட்டகங்கள், அவற்றை மயானம் என்று நாம் அழைப்பதில்லை. அழகாக, கல்லறைத் தோட்டம் என்றே அழைக்கிறோம். இந்தக் கல்லறைகள் இறைவன் அமைத்துக் கொடுக்கும் ஊஞ்சல் தொட்டிகள். பிரபஞ்சத்தின் அசைவுகளால், அதை ஆட்டி இறைவன் தன் குழந்தைகளை உறங்கச் செய்கிறார். உறங்கும் தம் மக்களை, ஒருநாள் அவர் விழிக்க வைப்பார். வானதூதர்கள் புடைசூழ அவர்கள் விண்ணுலகுக்கு அழைத்துச் செல்லப்படுவர். கல்லறையில் நிலவும் அமைதி, நம்மில் நுழைகிறது. நமது உள் ஆழத்தில் நுழைகிறது. இவ்வுலக வாழ்வு இறப்பில் முடிகிறது. ஆனால் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டவர்க்கு இது மறுஉலக வாழ்வின் நுழைவாயிலாக மாறுகிறது.

- நாம் கல்லறையில் கால் வைக்கும்போது, நமக்கும் விளக்கு வைக்க யாராவது வரும் காலம் தொலைவில் இல்லை என்னும் நினைவு மறையாமல் எழச் செய்கிறது. ஆம்.. "இன்று நீ, நாளை நான்"- என நமக்கு உணர்த்துகிறது.
- கல்லறையில் ஒன்று கூடி செபிப்பதும், திருப்பலி நிகழ்த்தப்படுவதும் அதன் புனிதத்தை மற்றவர்க்கு எடுத்துகாட்டுகிறது.
- மெழுகுத்திரிகளின் ஒளி வெள்ளத்திலே, மலர் மாலைகளின் குவியலிலே, சாம்பிராணிப் புகையின் நறுமணத்திலே, நமக்கு ஆன்மீகச் சிந்தனைகள் நம்மிடையே உருவாக்குகின்றன. வாடா மலராக, அணையா திரியாக, குறையா நறுமணமாக நம் வாழ்வு மாற வேண்டும் என வாழ்வின் பொருளை உணர்த்துகிறது.
- உன் வாழ்வு சிறப்பாக கருதப்பட வேண்டுமானால் பசித்தவருக்கு உணவு, தவித்த வாய்க்கு தண்ணீர் என்னும் மத்தேயு 25 ஆம் அதிகாரத்தை உங்கள் வாழ்வாக்குங்கள் என உணர்த்துகிறது.
- இதோ உங்களை விட்டுப் பிரிந்தவர்கள் இறைவனோடு என்றென்றும் வாழ்கிறார்கள். அந்த வாழ்வை நினைத்து, இறைவனின் முடிவில்லா வாழ்வுக்கு நன்றி கூறுங்கள் என்று அறிவுறுத்துகிறது. இவர்கள் விட்டுச் சென்ற நினைவுகள், நல்ல செயல்கள், நம்மோடு ஆற்றிய உரையாடல்கள் நம்மை மகிழ்விக்கின்றன, வியப்பில் ஆழ்த்துகின்றன. இவர்கள் நமது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளாகலாம். இவர்களிடம் நம்முடைய குறைகளையும், வேண்டுதல்களையும் எடுத்துச் சொல்லலாம். எங்கள் வேண்டுதல்களைத் தந்தையிடம் எடுத்துச் சொல்லுங்கள் எனலாம். கல்லறைத் திருநாள் இவ்வாறு நமது மனதை மிளிர வைக்கும், சிந்தனையைத் தெளிவாக்கும், புதுவாழ்வுக்கு நம்மை இட்டுச் செல்லும்.

மனிதமே நிலையற்ற வாழ்வு உங்களுக்கு மட்டுமல்ல, கல்லறைகளாகிய எங்களுக்கும்தான். நாங்களும் தகர்க்கப்பட்டு அடிச்சுவடுகள் அழிக்கப்படுவோம். இது நிகழப்போவதோ இறுதித் தீர்வை நாளில். என்னில் உறங்குவோர் உயிர்தெழுவர், துஞ்சினோரின் முதற்கனியாம் இயேசுவின் உயிர்ப்பில் உதித்த உண்மை இது. "இறந்த உம் மக்கள் உயிர் பெறுவர் அவர்களின் உயிரற்ற உடல்கள் மீண்டும் எழும்." (எசா27:19). அன்பு உள்ளங்களே, உதிரத்தால் நம்மோடு உறவுகளாய் பிறந்து, உணர்வில் நம்முடன் உண்டு உறங்கி வாழ்ந்து வரலாராகிப்போனவர்களை வருடம் ஒருமுறை நினைவுகூறும் கல்லறைத் திருநாளில், இவர்கள் நித்திய பேரின்ப வாழ்வில் நுழைந்திட வேண்டுவோம். கல்லறைத் திருநாளில் மட்டுமன்று, எல்லா நாட்களிலும் நினைவில் கொள்வோம். நமக்கும் உயிர்ப்பு உண்டு, நிறைவாழ்வு உண்டு என்று உணர்ந்திடுவோம். இறப்பு நிச்சியமானதுபோல் இறப்பிற்குப் பிறகு இருப்பவரும் நம்மை நினைவு கூறப்போவதும் நிச்சயமான உண்மை. நம் உடலையும் ஆன்மாவையும் காத்துக்கொள்ள மரணத்தின் நினைவு நாளாம் இன்று மறந்திடாது உறுதி எடுப்போம்.

## 2. கிறிஸ்து அரசர் பெருவிழா - ஒரு பார்வை

திரு. விக்டர்

கிறிஸ்து அரசர் பெருவிழாவானது நமது கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறன்று கொண்டாடப்படுகிறது. அதாவது திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறுக்கு முந்தின ஞாயிறு இவ்விழாவானது சிறப்பிக்கப்பட்டு வருகிறது. முதன்முதலாக இவ்விழாவானது திருத்தந்தை 11ம் பத்திநாதர் அவர்களால் 1925ம் ஆண்டு திருச்சபையின் அதிகாரப்பூர்வ விழாக்களில் ஒன்றாக அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மக்கள் இவ்விழாவினைச் சிறப்பித்து வருகின்றனர். "கிறிஸ்து ஓர் அரசரா?" இவ்வுலகிற்கு அவர் மானிட மகனாக, மீட்பராக, இழந்து போனவைகளைத் தேடி மீட்கிறவராகத்தான் வந்தார். ஆனால் இவைகளையும் தாண்டி "அவர் ஓர் அரசர்" என்பதை திருவிவிலியத்தில் பல பதிவுகளின் வாயிலாக அறிய முடிகிறது. இயேசுவின் பிறப்புச் செய்தி அன்னை மரியாளுக்கு "கபிரியேல்" என்னும் தூதன் வாயிலாக அறிவிக்கப்பட்டது. அப்பொழுது பிறக்கப்போகும் இயேசுவைப்பற்றி தூதன் உரைக்கும்பொழுது "அவர் பெரியவராய் இருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார், அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்" (லூக் 1:32) என்று கூறி இயேசு அரசர் என்பதை தெளிவுப்படுத்துகின்றார். "அவரது அரசுக்கு முடிவே இல்லை அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செய்வார்" (லூக் 1:33) என்று சொல்லி இயேசுவின் அரசாட்சிக்கு முடிவே இராது என்பதை வலியுறுத்துகின்றார்.

மேலும் இயேசு அரசர் என்பதை கி.மு. 500களில் வாழ்ந்த "செக்கரியா" என்னும் இறைவாக்கினர் "மகிழ்ந்து களிகூறு, இதோ உன் அரசர் உன்னிடம் வருகின்றார். கழுதையின்மேல் கழுதைக் குட்டியாகிய மரியின்மேல் ஏறி வருகின்றான் (செக் 9:9) என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார்". இதைத்தான் இயேசு உலகில் வாழ்ந்த நாட்களில் சீடர்கள் இயேசுவுக்குச் செய்து அவரை கழுதைக் குட்டியின்மீது அமரவைத்து "ஓசான்னா, ஓசான்னா" என்று பாடி அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று அவர் அரசர் என்பதை உலகரியச் செய்தனர் (யோவா 12: 14-15).

இவற்றை மெய்ப்பிக்கும் விதமாக இயேசுவும் "புதுப்படைப்பின் நாளில் மானிடமகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார்" (மத் 19:28) என்று தம்மைப்பற்றி தமது சீடர்களிடம் எடுத்துரைக்கின்றார். இன்னும் இவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் திருத்தூதர் யோவானுக்கு காட்சி தந்த கடவுள் "நான் வெற்றிபெற்று எனது தந்தையின் அரியணையில் அவரோடு வீற்றிருப்பதுபோல வெற்றிபெறும் எவருக்கும் எனது அரியணையில் என்னோடு வீற்றிருக்கும் உரிமை அளிப்பேன்" (திவெ 3: 21) என்றுரைத்து அவரோடு நமக்கும் அரியணையில் பங்குண்டு என்னும் மகிழ்ச்சியின் செய்தியைத் தருகின்றார். மேற்கண்ட சுருக்கமான சாட்சிய வசனங்கள் மூலமாக இயேசு ஒரு "அரசர்" என்பது ஆணித்தரமாக எண்பிக்கப்படுகிறது. இதனால்தான் இயேசுவை சிலுவையில் அறைவதற்கு அனுமதியளித்த "பிலாத்து" "நாசரேத்தூர் இயேசு யூதர்களின் அரசன்" என்று இயேசுவின் சிலுவையில் எழுதி வைத்தான். இயேசு கிறிஸ்து அவர்தான் என்பதற்கு இச்சான்றுகள் போதுமானது என்று எண்ணுகின்றேன். அவர் அரசர் என்றால் அவருக்குரிய சில அடிப்படைத் தகுதிகள் அவருக்கு இருக்க வேண்டும். பாதுகாப்பது, உணவளிப்பது, பராமரிப்பது, வழிநடத்துவது, அன்பு செய்வது போன்றவையாகும்.

**பாதுகாக்கிறவர்**

கிறிஸ்து அரசர் நம்மைப் பாதுகாக்கிறவர், விடுவிக்கிறவர், மீட்கிறவர். இயேசு என்னும் சொல்லுக்கு "மீட்கிறவர்" என்பது பொருள். இயேசு பெத்லகேமிலே பிறந்தபோது வானதூதர் இடையர்களிடம் சொல்லிய செய்தி. "இதோ மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். உங்களுக்கு மீட்பர் பிறந்துள்ளார்" (லூக் 2:10) என்பதுதான். இந்த அரசர் எவற்றிலிருந்து நம்மை மீட்கிறார்? அல்லது பாதுகாக்கிறார்?

- ♦ நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டு நம்மைப் பாதுகாக்கிறார் (1யோவா1:7)
- ♦ நம்மீதுள்ள சாபங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (கலா3:13)
- ♦ பிசாசின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கிறார் (கலா2:14)
- ♦ மரணப் பயத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (எபி 2:15)
- ♦ வியாதிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (1பேதுரு2:24)

♦ சமாதான குறைவிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (எபே 2:14)

♦ ஏழ்மையிலிருந்து விடுதலை அல்லது பாதுகாப்பு அளிக்கிறார் (2கொரி 8:9) மொத்தத்தில் நமது அரசர் கிறிஸ்து நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் நம்மைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

**உணவூட்டுகிறவர்**

அரசர் என்பவர் தன்னுடைய மக்களுக்கு உணவூட்டுகிறவராக தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்கிறவராக இருக்க வேண்டும். கிறிஸ்து அரசர் நம்முடைய ஆன்ம நலனில் அக்கறைக் கொண்டவராக அதற்குத் தேவையான இறைவார்த்தை என்கிற உணவை நமக்கு வழங்கி நம்மைப் பலப்படுத்துகிறார். "விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவு நானே, இந்த உணவை யாராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்" (யோவா 6:51) என்று தம்மைத்தாமே நமக்கு உணவாகத் தந்தார். "வார்த்தை மாமிசமாகி நம்மிடையே குடிக்கொண்டார்" (யோவா 1:14). எனவே நாம் வளர வேண்டுமானால் இந்த இறைவார்த்தையாகிய உணவை உண்டேயாக வேண்டும் (1பேதுரு 2:3).

**பராமரிக்கிறவர்**

அரசன் என்பவர் தனது மக்களைப் பாதுகாத்து, உணவளித்து அவர்களின் எல்லா நலன்களையும் கவனித்து பராமரிக்கிறவராக இருக்க வேண்டும். நமது கிறிஸ்து அரசரும் ஒரு ஆயன் தன் மந்தையைக் காத்து பராமரிப்பதுபோல் நல்ல ஆயனாக இருந்து நம்மைப் பராமரிக்கின்றார் (யோவா 10:10). "ஆடுகளுக்கு நானே வாசல், என் வழியாய் நுழைவோருக்கு ஆபத்தில்லை. மேய்ச்சல் நிலத்தைக் கண்டுக்கொள்வர். நான் ஆடுகள் வாழ்வை நிறைவாய் பெறும்பொருட்டே வந்தேன்" (யோவா 10: 10-11) என்று கூறி வாழ்வின் எல்லா நிறைவுகளையும் நமக்கு வழங்குகிறார். "நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். மேலும் நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்" (யோவா 14:13-14).

**வழிநடத்துகிறவர்**

அரசன் என்பவர் தனது மக்களை அறநெறிப் பாதையிலும், நல்வழியிலும் செம்மையான வழிகளிலும் வழிநடத்த வேண்டும். நமது கிறிஸ்து அரசர், "நானே வழியும், உண்மையும் வாழ்வும்" (யோவா 14:6) என்று கூறி நாம் யாவரும் அவரது வார்த்தையின் வழி நடக்கிறவர்களாய் இருக்க கற்றுக்கொடுக்கின்றார். "என் ஆடுகள் என் குரலுக்குச் செவிமடுக்கும் நான் அவற்றை நடத்திச் செல்ல வேண்டும்" (யோவா 10:16) என்று கூறி தாம் எவ்வாறு வழிநடத்துவார் என்பதை விளக்குகின்றார். நமது அரசர் தமது இரத்தத்தினால் பரலோகத்திற்குப் பாதை அமைத்துக்கொடுத்து (எபி.10:20) அந்த புதிய வழியிலே நம்மை வழிநடத்துகின்றார். அவரது வழி வாழ்வு தரும் வழி, அதிலே நடக்க நம்மை அழைக்கின்றார்.

**அன்பு செய்கிறவர்**

அரசன் என்பவர் தனது நாட்டு மக்களிடத்தில் மிகுந்த அன்புள்ளவராக இருப்பது மேற்கூறப்பட்ட அனைத்தையும்விட அவசியமானதாகும். நமது கிறிஸ்து அரசர் நாம் பாவிகளாய் இருந்த போதே நமக்காகத் தம் உயிரையே கொடுத்தார். இவ்வாறு அவர் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை விளங்கச் செய்தார் அல்லது எடுத்துக் காட்டியுள்ளார் (உரோ 5:8). "நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள்" (யோவா 13:34) என்று அறிவுரை வழங்கின ஆண்டவர், தம்மை விசுவசிக்கும் எவரும் அழியாமல் நித்திய வாழ்வைப் பெறும்பொருட்டு தம் உயிரையே நமக்களித்து தமது அன்பை வெளிப்படுத்திக் காட்டினர் (யோவா 3:16).

இவர் நம்மீது காட்டிய இந்த அன்பை நாம் பிறர்மீது காட்டும்பொழுது நாம் அவரது அதாவது நமது அரசர் இயேசுவின் சீடர் என்பதை மற்ற மக்கள் அறிந்து கொள்வர் (யோவா 13:35). இப்படியாக, நம்மை பாதுகாக்கிற நம் அரசர், நமக்கு உணவளிக்கிற அரசர், நம்மைப் பராமரிக்கின்ற அரசர், நமக்கு வழிகாட்டி நடத்துகிற அரசர், நம்மை அளவுக்கதிகமாய் அன்பு செய்கிற அரசர், நம்மோடு இருக்கையில் நமக்கென்ன கவலை? அவர் கைக்குள் அடங்கியிருப்போம், அவர் வார்த்தைகளை உணவாக்கிக்கொள்வோம், அவரது பராமரிப்பில் வளர்வோம், அவர் காட்டும் நல்வழியில் நடப்போம், அவரது அன்பில் நிலைத்திருந்து அவரது அரசாட்சியைப் பரப்புகிற மக்களாய் வாழ்வோம்.

## 3. தூய அலோசியஸ் வெர்சீலியா & கலிஸ்துஸ் கரவாரியோ

## இவர்களின் வாழ்வு நமக்கு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

சீன மண்ணில் திருச்சபைக்கு எதிராக பல்வேறு சவால்கள் துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்த வண்ணம் இருந்த காலமது. கிறிஸ்துவ மறைப்பணியாளர்கள், கிறிஸ்துவ மக்கள் அங்கு தொடர்ந்து கொல்லப்பட்டனர். அந்த நேரத்தில் தொன் போஸ்கோ, எதிர்கால சீன திருச்சபையின் வளர்ச்சி மற்றும் தனது சலேசிய சீன மறைப்பணியைப் பற்றியதொரு கனவு கண்டார். அக்கனவில் இரண்டு கிண்ணங்களைப் பார்க்கிறார். அவற்றில் ஒன்று வியர்வையாலும் மற்றொன்று சலேசியர்களின் இரத்தத்தாலும் நிரம்பியிருந்தன. அப்படியென்றால் சலேசிய மறைப்பணியாளர்கள் சீன மண்ணில் மறைச்சாட்சிகளாக திகழப் போகின்றார்கள் என்பதை உணர்த்தும் கனவாக அமைந்ததை புனித ஆயர் வெர்சீலியா மற்றும் புனித தந்தை கரவாரியோ இவர்களின் வாழ்க்கையின் மூலம் உறுதிசெய்யப்பட்டதை நாம் பார்க்கலாம்.

சலேசிய குருவான புனித லூயி வெர்சீலியா (1873-1930) இக்கனவு தன் வாழ்க்கையில் நிகழும் என்று சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. பக்தியுள்ள

பீடச்சிறுவனாக இருந்தபோதும் பின்நாளில் தாம் ஒரு குருவாவோம் என்றும் நினைத்ததில்லை. மாறாக ஒரு சிறந்த விலங்கியல் மருத்துவராக வேண்டும் என்பதே இவரின் எண்ணம். இதற்கான தேடலின் முடிவில் சலேசிய ஆரட்டரிக்கு வந்தடைந்தார், தொன் போஸ்கோவின் கனிவு, அரவணைப்பில் ஈர்க்கப்பட்டு சலேசிய துறவறத்திற்குள் நுழைந்தார். இறையருளால் சீன மறைப்பணிக்காக செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்ட தந்தை வெர்சீலியாவின் விருப்பம் நிறைவேறியது. 1905ல் சீன மறைப்பணிக்காக முதன்முதலாக ஒரு சலேசிய குழு, தந்தை வெர்சீலியா தலைமையில் அனுப்பப்பட்டது. அங்கு மாணவர் இல்லமும் பள்ளியும் அமைக்கப்பட்டன.

தொன் போஸ்கோவைப் போலவே இவரும் அன்பும் கனிவும் கொண்டவராகப் பணியாற்றினார். சீன மக்கள் நலனில் மிகுந்த ஆர்வமோடு செயல்பட்டார். அரசியல் சூழ்நிலை மாற்றத்தால் தந்தை வெர்சீலியா உட்பட சலேசியர்கள் சீனாவைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாய நிலை. ஆனால் தந்தை வெர்சீலியா தன்னை திடப்படுத்திக் கொண்டார். என்னவானாலும் இந்த மக்களோடுதான் தனது வாழ்வு என்று முடிவெடுத்தார். தலைமைத் தந்தையிடமிருந்து தந்தை வெரிசீலியாவுக்கு திருப்பலிக் கிண்ணம் பரிசாகப் கிடைத்தது. அவர் அதை பெற்றுக்கொள்ளும் போது, "சீன மறைப்பணி வளர்ச்சியில் சலேசியர்களின் இரத்தம் வழியும் கிண்ணமாக கனவில் கண்டார் தொன் போஸ்கோ. இன்று இப்பரிசு எனக்கு கிடைத்திருக்கிறது. நான் அதை நிரப்புவேன்" என்று கூறி அர்ப்பணித்தார்.

காலப்போக்கில் அவர் பணியாற்றும் இடம் மறைமாவட்டமாக உயர்ந்தது. மக்களோடு மக்களாக பணியாற்றுவதில் அதிகம் விரும்பியதால் தன்னை ஒரு ஆயராக நியமிக்க வேண்டாம் என்று தனது தலைமைக்குப் கோரிக்கை வைத்தார். இருப்பினும் அவர் சிறிதுகாலத்திற்கு பிறகு ஆயராக நியமிக்கப்பட்டார். ஆயராக இருந்தாலும் தொடர்ந்து அன்றாடம் மக்களோடு பயணித்து அவர்களை முகமுகமாகச் சந்தித்து தேவையான உதவிகளைச் செய்துவந்தார். நற்கருணையைத் தன் மூலமாக வைத்து தினமும் செபித்தார். அப்போதுதான் தனது மக்களுக்காக அவர்களின் வாழ்வுக்காக தாம் ஒரு மறைச்சாட்சியாக மாறவேண்டிய காலம் நெருங்கி விட்டதை உணர்ந்தார்.

1922ல் அவரைச் சந்தித்த சில இளம் துறவற சகோதரர்களில் ஒருவர் சீன மறைப்பணிக்காக தாமும் ஆயருடன் வர விருப்பம் தெரிவித்தார். 1924ல் மறைப்பணியாளராக சீனா சென்ற அந்த அருட்சகோதரர் கரவாரியோ ஆவார். 1929ல் ஆயர் வெர்சீலியாவின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சீனா, திருச்சபைக்கு எதிராக கடுமையாக மாறிக்கொண்டிருந்த காலம் அது. குறிப்பாக தந்தை கரவாரியோ பணியாற்றும் "லின்ச்சோ" மிகவும் கலவரத்திற்குட்பட்ட பகுதி. 1930 பிப்ரவரி 24ல் தந்தை கராவாரியோ, 2 இளம் வேதியார்கள், 3 இளம்

பெண்கள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் ஆயர் வெர்சீலியா, "லின்ச்சோ" சென்றார். அப்பயணத்தின் போது வழிக்கொள்ளையர் கூட்டம் அவர்களை முற்றுகையிட்டது. அக்கொள்ளையர்களின் தீயக்கண்கள் குழுவில் இருந்த 3 இளம் பெண்கள் மீது விழ, அப்பெண்களை பாலியல் ரீதியிலும் கொலை செய்யும் நோக்கிலும் கொடியவர்கள் தொடர்ந்து முன்னேறினர். அப்பெண்களையும் மற்றவர்களையும் காப்பாற்றும் பணியில் துணிச்சலாக நின்று போராடினார்கள் ஆயர் வெர்சீலியாவும், தந்தை கரவாரியோவும்.

கொள்ளையர்களால் ஆயர் வெர்சீலியாவும் தந்தை கரவாரியோவும் கடுமையாக தாக்கப்பட்டு பின் காட்டுப்பகுதிக்கு கடத்தப்பட்டனர். அக்கொள்ளையர்களில் ஒருவன், "மற்றவர்களுக்காக போராடுகிறீர்களே உங்கள் உயிர்மீது ஆசையில்லையா? சாகப்போவதை நினைத்து பயமில்லையா?" என்று கேட்டான். அதற்கு ஆயர் வெர்சீலியா, "நாங்கள் குருக்கள். எதற்காக சாவைக்கண்டு பயப்பட வேண்டும்?" என்றார். மரணம் நிச்சயம் என்றாகிவிடவே இவ்விரு துறவிகளும் இறுதியாக ஒருவருக்கொருவர் ஒப்புரவு அருட்சாதனம் செய்துகொண்டனர். ஒருவழியாக அந்த 3 இளம் பெண்கள் உட்பட மற்ற பிணைக்கைதிகளையும் கொள்ளையர்கள் பத்திரமாக விடுதலை செய்தனர். பிறகு தந்தை கரவாரியோவும் ஆயர் வெர்சீலியாவும் சுட்டுக்கொள்ளப்பட்டனர்.

மரண வாசலில் தவித்த 3 இளம் பெண்களின் இதயங்களில் இந்நிகழ்வு மாறா தழும்பை ஏற்படுத்தியது. இந்த 3 மகள்களுக்காக 2 தந்தையர்கள் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்ததை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆம் அன்பர்களே, ஆயர் வெர்சீலியாவும் தந்தை கரவாரியோவும் தங்களது இரத்தத்தால் கிண்ணத்தை நிரப்பிவிட்டனர். பிறர் வாழ தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். அக்டோபர் 1ம் நாள் 2000வது ஆண்டில் திருச்சபை இவர்களை புனிதர்களாக உயர்த்தி பிப்ரவரி 25ம் நாள் விழாவாகக் கொண்டாடுகிறது. சிறப்பான விதத்தில் சலேசியர்கள் இவர்களது நினைவு நாளை நவம்பர் 13ம் நாள் கொண்டாடுகின்றனர்.

## 4. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. உலகில் அமைதி நிலவுவதற்காக, நாம் எல்லாரும் செபமாலை செபிக்குமாறு, அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். பாத்திமாவில் அன்னை மரியா கடைசிமுறையாக காட்சியளித்ததன் நூறாம் ஆண்டு அக்டோபர் 13, 2017 வெள்ளியன்று நிறைவடைந்த இவ்வேளையில், ஆண்டவரின் அன்னையும், மறைப்பணிகளின் அரசியுமான மரியன்னையை நாம் நோக்குவோம் என்று கூறினார். உலகின் அமைதிக்காக, அன்னை மரியை நோக்கி செபமாலை செபிப்பதன் வழியாக, மிகவும் வன்கொடுமை நிறைந்த ஆன்மாக்களின் இதயங்கள், தங்களின் வார்த்தைகள் மற்றும் செயல்களிலிருந்து

வன்முறையைக் கைவிட்டு, வன்முறையற்ற சமூகங்களைக் கட்டியெழுப்பவும், நம் பொதுவான இப்பூமிமீது அக்கறைச் செலுத்தவும் இயலும் என்று, திருத்தந்தை கூறினார். போர்த்துக்கல் நாட்டில் ஜெசிந்தா, லூசியா, பிரான்சிஸ் ஆகிய மூன்று சிறாருக்கும், 1917ம் ஆண்டு மே 13ம் தேதி முதல் அக்டோபர் 13ம் தேதிவரை ஆறு முறைகள் காட்சிகொடுத்தார் அன்னை மரியா. அவ்வேளையில் அன்னை மரியா, உலகின் அமைதிக்காகச் செபமாலைச் செபிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

2. திருத்தந்தை பிரான்சிஸ் "பாதுகாப்பான இல்லம்: பேரிடர் ஆபத்துக்கு உள்ளாக்கப்படுவதைக் குறைத்தல், புலம் பெயர்வைக் குறைத்தல்" என்ற தலைப்பில் அக்டோபர் 13, இயற்கைப் பேரிடர் தடுப்பு உலக நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த உலக நாள் 1989ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த இருபது ஆண்டுகளில், இயற்கைப் பேரிடர்களால் 13இலட்சத்து 50ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர் என்று ஐ.நா. புள்ளி விவரம் ஒன்று கூறுகிறது.

3. தெலுங்கானா மாநிலத்திலுள்ள ளாயஅளாயடியன மறை மாவட்டத்தின் புதிய ஆயராக, இந்நாள்வரை திருச்சூர் துணை ஆயராகப் பணியாற்றிவந்த, ஆயர் **Raphael Thattil** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாட்டின் வடக்கிலுள்ள ஓசூர் சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் புதிய மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, அருள்பணி **Sebastian (Jobby) Pozholiparampil** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். சீரோ-மலபார் வழிபாட்டுமுறை சமூகங்கள் விழாக்கள் கொண்டாடவும், மற்ற நிகழ்வுகளை நடத்தவும், இலத்தீன் வழிபாட்டுமுறை திருஅவை, தனது கட்டடங்களைக் கொடுத்து உதவுமாறும், இவ்விரு வழிபாட்டுமுறைகளுக்கிடையே ஒத்துழைப்பும், நல்லிணக்கமும் தொடர்ந்து நிலவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

4. குருத்துவப் பயிற்சி என்பது, நம் வாழ்வின் செயல்களைச் சார்ந்தது அன்று. ஆனால், அது முதலில் நம் வாழ்வில் கடவுளாற்றும் செயலைச் சார்ந்தது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருள்பணியாளர்கள் குழு ஒன்றிடம் கூறினார். குருத்துவ இறையழைத்தலின் கொடை **(Ratio Fundamentalis)** என்ற தலைப்பில் திருப்பீட குருக்கள் பேராயம் நடத்திய பன்னாட்டு கூட்டத்தில் கலந்துகொண்ட 268 பிரதிநிதிகளை வத்திக்கானிலுள்ள கிளமெந்தினா அறையில் சந்தித்து உறையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குருத்துவ உருவாக்குதலை குயவர் கையிலுள்ள மண்கலத்தை (எரே. 18:1-10) ஒப்புமைப்படுத்தி விளக்கினார். குருத்துவ வாழ்விற்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, இறைமக்களையும் நாம் மறந்துவிடக் கூடாது என்று கூறினார்.

5. உரோம் கிரகோரியன் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "டிஜிட்டல் உலகில் சிறார் மாண்பு" என்ற உலக மாநாட்டின் இறுதியில் ஒவ்வொரு குழந்தையும் மாண்புடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்கு உரிமையைக் கொண்டுள்ளது எனினும், உலகில் இலட்சக்கணக்கான சிறார் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றனர் எனவும், நம் வாழ்வை பல நேர்மறை வழிகளில் மாற்றியிருக்கும் தொழில் நுட்பத்தில், சிறார் பயன்படுத்தப்படுவது வளர்ந்து வருகின்றது எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

6. மும்பை நகரை மையமாகக் கொண்ட **Harmony Foundation** சமூக நீதிக்கான அன்னை தெரேசா விருதை, சலேசிய அருள்பணியாளர் டாம் உழுன்னலில் அவர்களுக்கு வழங்கவுள்ளது. ஏமன் நாட்டின் ஏடெனில், 2016ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இஸ்லாம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு, 18 மாதங்களுக்குப்பின் விடுதலைச் செய்யப்பட்டுள்ள, அருள்பணி டாம் அவர்கள், தனது சொந்த மாநிலமான கேரளா திரும்பியுள்ளார். அவருக்கு அங்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## சுடர் வாசகர் போட்டி - 40 சரியான விடைகள்

1. 28வயதில்
2. திருத்தந்தை தூய 23 யோவான்
3. அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா
4. தூய அந்தியோக்கு இஞ்ஞாசியார்
5. தூய யூதா ததேயு
6. **Lankesh Patrike** இலங்கேஷ் பேட்ரிக்
7. தூய அசிசியார்
8. திருத்தந்தை 13ஆம் கிரகொரியார்
9. அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா
10. மிருகங்களுக்கு இறையாக்குவது
11. தூய லூக்கா நற்செய்தி
12. இரம்பத்தால் அறுத்து கொல்லப்பட்டார்
13. அருளாளர் தொன் மைக்கேல் ரூவா
14. கோசொவோ நாட்டில் உள்ள பிரிஸ்டினா நகரில்
15. செபமாலையை பக்தியோடு செபிக்கின்ற ஒருபடை என்னோடு இருக்குமேயானால் இந்த உலகத்தையே நான் மாற்றிக் காட்டுவேன்

**பதில் எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்**

**துள்ளியமாக பதில் எழுதியவர்கள்**

**1. A. George Stephen, Ragavanpettai**
**2. A. Arone, Trichy**
**3. Mrs. Rani Balan, Trichy**

## சுடர் வாசகர் போட்டி - 41

1. நவம்பர் 2ஆம் நாள் இறந்தவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிக்கும் முறையை முதலில் உருவாக்கியவர் யார்?
2. முதல் முறையாக சீனாவிற்குப் பயணம் மேற்கொண்ட சலேசிய புனிதர் யார்?
3. அருளாளர் மதலேனா மொரானோ எந்த ஆண்டு எப்படி இறந்தார்?
4. சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு இயேசுவுக்காக மரித்தவர் யார்?
5. "கிறிஸ்துவை அறிமுகப்படுத்தியவர்" என்று அழைக்கப்படுபவர் யார்?
6. "கல்லறைகள் இறந்தவர்கள் உறங்க இறைவன் கொடுக்கும் -------
7. "டிஜிட்டல் உலகில் சிறார் மாண்பு" இந்த தலைப்பில் நடந்த மாநாடு எந்த இடத்தில் நடந்தது?
8. "கடவுளின் தூதர் என்னை அன்பு செய்கிறார் அவரே எனது உடலை துணிச்சலுடன் காத்துக்கொள்கிறார்" கூறியவர் யார்?
9. "தூயவர்களும், மாசற்றவர்களும் கடவுளைக் காண்கின்றனர். அப்போது இதயக் கோணல்கள் நேராகின்றன" கூறியது யார்?
10. உரோமை மறைமாவட்டத்தின் தலைமைக் கோவிலின் பெயர் என்ன?
11. "நானும் உங்களோடு சீனாவிற்கு வருவேன்" வெர்சீலியாவிடம் கூறியவர் யார்?
12. "நான் இயேசுவாகவே வாழ்கிறேன்" கூறியது யார்?
13. கன்னிமரியாள் எந்த வயதில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்?
14. "ஓ விலையேறப்பெற்ற சிலுவையே வாழ்க என் ஆண்டவரின் உடலை ஆபரணமாக அணிந்துக்கொண்ட உம் கரங்களில் என்னை ஒப்படைக்கிறேன்" என்று கூறியவர் யார்?
15. மும்பை நகரை மையமாகக் கொண்ட சமூக நீதிக்கான அன்னை தெரேசா விருது யாருக்கு அளிக்கப்பட்டது?
16. "சிலுவை" ஆண்டவரின் உடலை ஆபரணமாக அணிந்துக்கொண்டதாக கூறும் திருத்தூதர் யார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை நவம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

03.12.17 திருவருகைக்காலம் 1ஆம் ஞாயிறு

05.12.17 அருளாளர் பிலிப்பு ரினால்டி சலேசியன்

08.12.17 கன்னிமரியாளின் அமலலோற்பவம் பெருவிழா

10.12.17 திருவருகைக்காலம் 2ஆம் ஞாயிறு

16.12.17 கிறிஸ்து பிறப்பு நவநாள்

17.12.17 திருவருகைக்காலம் 3ஆம் ஞாயிறு

24.12.17 திருவருகைக்காலம் 4ஆம் ஞாயிறு

25.12.17 கிறிஸ்து பிறப்பு பெருவிழா

26.12.17 தூய ஸ்தேவான்

27.12.17 தூய யோவான் திருத்தூதர்

28.12.17 மாசில்லா குழந்தைகள் திருநாள்

31.12.17 திருகுடும்ப விழா மற்றும் மரியாள் இறைவனின் தாய்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

கிறிஸ்துமஸ் அடையாளங்கள்

திருச்சபை செய்திகள்


**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
...........................................
...........................................
...........................................

## நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | பு | **புனிதர் அனைவர் பெருவிழா** | **I. தி.வெ. 7: 2-4,9-14<br>II. 1யோவா 3: 1-3** | **மத் 5: 1-12அ** |
| 2 | வி | (மரித்தோருக்கான பொதுப் பகுதியில் எடுத்துக் கொள்ளவும்) (வாசக நூல் IV பக் 923) | | |
| 3 | வெ | புனித மார்டின் தெ போரஸ் | உரோ 9: 1-5 | லூக் 14: 1-6 |
| 4 | ச | புனித சார்லஸ் பொரோமெயோ | உரோ 11: 1-2,11-12,25-29 | லூக் 14: 1,7-11 |
| **5** | **ஞா** | **ஆண்டின் 31ஆம் ஞாயிறு** | **I. மலாக் 1:14ஆ-2:1-2,8-10<br>II. 1தெச 9:7ஆ-9,13** | **மத் 23: 1-12** |
| 6 | தி | | உரோ 11: 29-36 | லூக் 14: 12-14 |
| 7 | செ | | உரோ 12: 5-16அ | லூக் 14: 15-24 |
| 8 | பு | | உரோ 13: 8-10 | லூக் 14: 25-33 |
| 9 | **வி** | **இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு** | **எசே 47: 1-2,8-9,12<br>1கொரி 3:9ஆ-11ஈ 16-17** | **யோவா 2: 13-22** |
| 10 | வெ | புனித பெரிய லொயோ திருத்தந்தை | உரோ 15: 14-21 | லூக் 16: 1-8 |
| 11 | ச | தூரின் நகர் புனித மார்டின் | உரோ 16:3-9, 16,22-27 | லூக் 16: 9-15 |
| 12 | **ஞா** | **ஆண்டின் 32ஆம் ஞாயிறு** | **I. சா.ஞா. 6: 12-16<br>II. 1தெச 4: 13-18** | **மத் 25: 1-13** |
| 13 | தி | | சா.ஞா. 1:1-7 | லூக் 17: 1-6 |
| 14 | செ | | சா.ஞா. 2 : 23-3:9 | லூக் 17: 7-10 |
| 15 | பு | புனித பெரிய ஆல்பர்ட் | சா.ஞா. 6: 1-11 | லூக் 17: 11-19 |
| 16 | வி | புனித மார்கரெட், புனித ஜெட்ரூது | சா.ஞா. 7: 22-8:1 | லூக் 17: 20-25 |
| 17 | வெ | அங்கேரி புனித எலிசபெத்து | சா.ஞா. 13: 1-9 | லூக் 17: 26-37 |
| 18 | ச | திருத்தூதர்கள் பேதுரு-பவுல் பேராலயங்கள் | தி.ப. 28: 11-16, 30-31 | மத் 14: 22-33 |
| 19 | **ஞா** | **ஆண்டின் 33ஆம் ஞாயிறு** | **I.நீமொ.31:10-13,19-20,30-31<br>II. 1தெச 5: 1-6** | **மத் 25: 14-30** |
| 20 | தி | | 1மக் 1:10-15,41-43,54-57,62-64 | லூக் 18: 35-43 |
| 21 | செ | தூய கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் | செக் 2: 10-13 | மத் 12: 46-50 |
| 22 | பு | புனித செசிலியா-கன்னியர் | 2மக் 7: 1,20-31 | லூக் 19: 11-28 |
| 23 | வி | புனித முதலாம் கிளமெண்ட் | 1மக் 2: 15-29 | லூக் 19: 41-44 |
| 24 | வெ | புனிதர்கள் ஆன்ரூ டுங் லாக் | 1மக் 4:36-37,52-59 | லூக் 19: 45-48 |
| 25 | ச | அலெக்சாந்திரியா நகர் புனித கத்தரின் | 1மக் 6: 1-13 | லூக் 20: 27-40 |
| 26 | **ஞா** | **கிறிஸ்து அரசர் பெருவிழா** | **I. எசா 34:11-12,15-17<br>II. 1கொரி 15: 20-26,28** | **மத் 25: 31-46** |
| 27 | தி | | தானி 1:1-6,8-20 | லூக் 21: 1-4 |
| 28 | செ | | தானி 2: 31-45 | லூக் 21: 5-11 |
| 29 | பு | | தானி 5:1-6,13-14,16-17,23-28 | லூக் 21: 12-19 |
| 30 | வி | தூய அந்திரேயா திருத்தூதர் | உரோ 10: 9-18 | மத் 4: 18-22 |